KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 6] 1933 ஞு ஏப்ரல் மீ 13உ [No. 15

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 281
2. நான் கண்ட உலகம் - P. இராமாநுஜன் 283
3. பொதிகை நிகண்டு (கூ, கெ, கே, கை, கொ, கோ) S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L. 286
4. யாப்பிலக்கணம் (செய்யுள்-கலிப்பா) வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 287
5. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 288
6. அப்பர் (64 கலைகள்-வியாகரணம்-முற்றியலுகரம்) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 289
7. தமிழ்ப் பாடம் (நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 291
8. காற்று மழை (அங்கம் 1. களம் 2.) Sbakespeare's - Tempest 293
9. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 9-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 295
10. வர்த்தமானம் 299

கலாநிலயம்

விற்பதற்கே வேண்டும் விலை 4.

189148

பொருள்களின் தோற்றத்தைக் கடந்து பொருள்களையே நோக்குமொரு பார்வையின் வீரம் வாய்ந்த பெரியோர்தாம் ஆயினோர்பலர், வேறுவேறு காலங்களில் வேறு வேறு இடங்களில் வேறு வேறு மொழிகளில், மனிதருக்கு உண்மையாய் உதவவல்ல உறுதிகள் இவையிவையெனப் புகன்றுள பொய்யா மொழிகள் அனைத்திற்கும் மாறாக, இக்காலம், கல்வியும் அறிவும், உலகத்திற்கோர் உதவிசெய்யவேண்டுமென்னும் நல்லெண்ணமும் உடையவர்களெனக் கருதுதற்கேற்றவர்களாய் நிற்கின்ற சிலர், ஏன்தான் இவ்வண்ணம் மனிதவாழ்க்கை அமைதியிழக்கும்படி உழக்குகின்றனரோ என்று யாவருக்கும் இயற்கையாக எழவல்ல ஐயத்திற்குக் கார்லைலைக் கொண்டு யாம் காட்டிய காரணமன்றியும் இத்திறத்தில் உய்த்துணர்தற்கியன்ற செய்திகள் இன்னுஞ் சில உள.

குடிவாழ்க்கை அரசியல். பொருளாதாரம் கல்வி ஆசாரம், முதலிய பற்பல வகைகளில் சீர்திருத்தங்கள் செய்திடமுயலும் தலைவர்களாய் விவகரிப்பவர் தம் உண்மைநிலையையும் தகுதியையும்உள்நுழைந்து சோதிக்குங்கால் அரிய இரகசியங்கள் சில வெளிப்படும். இன்னோரில் அனைவரும், பெருக்கும்புகழிற்கும் பொல்லாத ஊதியத்திற்கும் ஆசைப்பட்டு, ஜனங்களின் நன்மையை நாடுபவர்போல்நடிக்கின்ற வஞ்சகர்களாதலால், மேலோர் வழங்கியுள்ள வித்தக அமுதினைத் தவிர்த்துத் தம் இன்னாத நஞ்சினை நஞ்சென்று தெரிந்து ஊட்டுகின்றனர் என்று நாம் இங்குக் கூற வரவில்லை. இத்தகைய பாதகர் இக்காலம் மிகச் சிறுபான்மையோரே. தம்முடைய துரோகத்தில் தாமே அகப்பட்டு அன்னவர் மிகவிரைவில் நசித்துவிடுகின்றனர். அன்னோர் போக, ஐயமறநிற்கின்ற நல்லெண்ணமுடையவர்களாய், உயரிய உதவியே செய்யவேண்டுமெனு மொரு உண்மையான நோக்கமுடன், நஞ்சினை நஞ்சென்று தெரிந்துகொள்ளாமல் எடுத்து நல்குகின்றவர்களாகவே நம் தலைவர்களில் பெரும்பாலோர் அமைந்திருக்கின்றனர். இத்தகையவர்களில் ஒரு சிலரேனும் கல்விமான்களாகக் காணப்படுகின்றனரே; மற்று ஏன் இவ்விபரிதம் நிகழ்கின்றது?—கேட்க வேண்டிய கேள்வியே யிது.

இதற்கு விடை வழங்க நேர்கின்ற இவ்வமயத்தில் சீன தேசத்து வித்தகர் **கன்பூஸியஸ்** விளம்பியுள்ளவொரு வாக்கியத்தை நம் நண்பர்களுக்கு நினைவுபடுத்த விழைகின்றோம்—

When you know, to know that you know, and when you do not know, to know that you do not know—that is true knowledge.

Study without thought is vain; thought without study is perilous.

All my knowledge is strung on one connecting thread, I used to spend whole days without food and whole nights without sleep, in order to meditate. But I made no progress. Study, I found, was better.

[ஒன்றினை நீ அறிந்துகொண்டகாலத்து, அதனை அறிகின்றாய் என்பதை அறிவதும்; மற்று, அறிந்துகொள்ளாத விடத்து, அறிந்திலை என்பதை அறிவதும்—இதுவே உண்மையறிவு.

சிந்தனையின்றிப் படிப்பதெல்லாம் வீண்; படிப்பதின்றிச் சிந்திப்பதோ மிகவும் அபாயகரமானது. என்னுடைய

அறிவெல்லாம், ஒரோகயிற்றில் கோத்து இணைக்கப் பெற்றிருக்கின்றது. சிந்தனையில் ஆழ்ந்தவனாய், பகலில் உண்ணாமலும்]இரவில் உறங்காமலும் நாட்கள்முழுவதும் நான் கழித்திருக்கின்றேன். ஆயினும், அதனால் நான் எய்திய பயன் ஒன்றுமில்லை. படிப்பதே சிறந்ததென்பதைக் கண்டுகொண்டேன்]

இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாய் இருப்பவர்கள் நம் தலைவர்களில் எத்தனை பேர்? "கற்றிருக்கின்றோம்" என்றாலும் என்பாரே யொழிய, "கற்கின்றோம்" என்பவர்தம்மை இத்தலைவர்களுக்கிடையே எங்குங் காண்கிலேம். இதன் விளைவேனும் 'வீண்' என்பதோடு முடிகின்றது. "எனக்கு அறிவுண்டு, சிந்தித்துச் சிந்தித்து இம்முடிவிற்கு வந்தேன்" என்பார் பலர். ஒன்றுங் கல்லாதவர், சிந்திக்கத் தலைப்படுவதால் தான் கன்பூஷியஸ் சொல்லிய வண்ணம் வாழ்க்கை வழியனைத்தும் அபாயகரமாகி வருகின்றது. இதுவுமன்றிக் "கற்றிருக்கின்றோம்" என்பவர்தாம் பெரும்பாலும் எதனைக் கற்றிருக்கின்றனர். வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிப்பதும், அவைகளுக்கு எழுதுவதும், கூறியது கூறிக் கூறிக் கூட்டங்களில் முழங்குவதும், இவையனைய பிறவும் கல்வியெனும் பெயரால் கருதப்பெறலாகின்றன. கலாசாலைப் பட்டங்கள், தொழில் திறமை முதலியவைகளைக் கல்வியினின்று பிரித்தறிய வல்லார் மிகச் சிலர். சிந்தனையைச் சீர்படுத்த உதவாதவை இவை.

அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகுநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூவுந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்

என நிகழும் நாலடியார் செய்யுள் இந்தச் செய்தியை இனிதெடுத்து விளக்குகின்றது.

இன்னொரு விதத்திலும் தலைவர்தம் திறத்தினைச் சோதித்துணரலாம். எத்தனையோ துறைகளில் எத்தனையோ வகைகளில் எத்தனையோ பலர் சீர்திருத்தங்கள் பேசுகின்றனர். இன்னவர்களில் யாரேனும், "நான் இவ்வண்ணம் சொல்கின்றேன்; எனினும், ஸாக்ரடீஸ், ப்ளேட்டோ, எமர்ஸன், மேடர்லிங்க், புத்தர்; இயேசுகிறிஸ்து, நபிநாயகம், கம்பர், வள்ளுவர், இன்னும் உலக வித்தகர் எண்ணிறந்தோர், நான் சொல்வதற்கு மாறாக இவை இவை உரைத்திருக்கின்றனர்; ஆயினும், அவர் உரைத்திருப்பது அவ்வளவும் பிழை; நான் உரைப்பதே நேர்" என்று உரைக்கின்றார்களோ? இவ்வாறு பேசத் துணிவார்களாயின், அன்னவர்களை வீரமேனும் உடையவர்களென்று ஒருவாறு பாராட்டலாம். அல்லது, வித்தகர்களாய் விளங்குகின்ற அம்மேலோர்தம் மொழிகளையும் அவைகளுக்குமாறாகத் தாம் உரைப்பவைகளையும் அயலயல் எடுத்துக்காட்டி, இரண்டும் இரண்டுபடுவன்போல் தோன்றினும் இவை அந்தத்தில் இன்ன இன்ன காரணங்களால் இணங்குவனவாகக்கருதுதல் வேண்டும் என்று அமைதி கூறுவார்களாயின், அது அவர்களுடைய வாய்மைக்கும் அறிவிற்கும் அறிகுறியாகுமே. இவ்வாறு செய்யவேண்டு மென்பதைத் தம் கடமையாக நம் தலைவர்கள் கொள்ளும்படி வற்புறுத்தற்குரியவோர் நிலைமையைச் சனங்கள் அடைந்திராமையே குறை.

வேறொன்றும் வேண்டா. கருத்தினது ஆழத்தில் காண்கின்ற மாறுபாடுகளைப்பற்றி இப்பொழுது பேசாமல் மேல் நோக்கிற்கே வெளிப்படையாகத் தென்படுகின்ற இரண்டொரு விடயங்களை இங்கு உதாரணமாய்க் காட்டினாற் போதும். ஆங்கிலேய ஆகாய விமானிகள் சிலர் இம்மாதம் 3உ இமயமலைச் சிகரத்தை அடைந்துவிட்டனர் என்னும் செய்தியைக் கூறி, "இந்தியர்கள் இத்தகைய முயற்சி யொன்றைச் செய்யக் கூடாதா" என்று ஒரு பத்திரிகையின் ஆசிரியர் ஏங்கி நெட்டுயிர்ப்பு வீங்குகின்றார். ஜுவினல் என்னும் லட்டீன் புலவர்,

Go, climb the rugged alps, ambitious fool,
To please the boys, and be a theme at school

என்று இதன் பயனின்மையை இகழ்ந்திருக்கின்றாரென்பதை, அப்பத்திரிகையின் ஆசிரியர் அறிவாரா? ஜுவினல் என்ன காரணங்கள்கொண்டு அவ்வாறு சொல்லியிருக்கின்றாரென்பதைத் தெரிந்துகொள்ளத்தகுந்த பயிற்சி இவருக்கு உளதோ. ஜுவினல் அவ்வாறு சொல்லியது பிழை, தான் சொல்லும் இதுவே நேர் எனத்தகுந்த துணிவு இவருக்கு உண்டோ. அல்லது, இவரை உத்தரம் கேட்கத்தகுந்த ஜனங்கள்தாம் இருக்கின்றார்களா? இச் சந்தர்ப்பத்தில் இன்னுமொன்றும்நினைவுபடுத்திக்கொள்ளலாம். அமரிக்க வித்தகர் எமர்ஸன் என்பவர், எத்தனையோ சனங்கள் வர்த்தமானப் பத்திரிகைகளைப் படித்துப் படித்து வீணாகப்போகின்றார்களே என்று மிகவும் வருந்துகின்றார். வேதமேயனைய இவ்வாக்கிற்கு மாறாக, வர்த்தமானப் பத்திரிகைகளின் அவசியத்தை வற்புறுத்துகின்றவர், அதனை அறிந்தவர்களோ அல்லரோ. அறிந்தவராயின் தக்க காரணங்களுடன் எமர்ஸனது உரையைப் பொய்யாக்க வேண்டும்; அல்லராயின் சும்மா விருக்கவேண்டும். இவ்விரண்டிலொன்றைக் கேட்பதற்குச் சனங்கள் இல்லாமையன்றோ குறை.

இனி, அரசியல் வர்த்தகம் கைத்தொழில் முதலியவைகளின் முன்னேற்றங்களைப் பற்றிப் பேசுவார்க்கு ஒரு வார்த்தை. அமரிக்காவையும் இங்கிலாந்தையும் எடுத்தெடுத்துக் காட்டாமல் இவர்தாம்இயம்புவதற்கு ஒன்றுமில்லை.தம்மைத்தாமே ஆண்டுகொள்கின்ற நாடுகள் அவை. ஜனநாயகத்தின் சிறப்புவாய்ந்தது அமரிக்கா. இவைதாம் என்ன பெரும்பயனைக் கண்டன?நாமும் அவர்களைப்போல் ஆகி அவரடைந்த பயனைத் தானே அடையப் போகின்றோம். ஆங்கிலேயக் கவி வில்லியம் வோர்ட்ஸ்வோர்த் என்பவர்,

Milton ! thou shouldst be living at this hour :
England hath need of thee : She is a fen
Of stagnant waters: altar, sword, and pen,
Fireside, the heroic wealth of hall and bower
Have forfeited their ancient English dower
Of inward happiness. We are selfish men :
Oh ! raise us up, return to us again ;
And give us manners, virtue, freedom, power.

எனப் புலம்பும் சொற்கள் இன்னவர்தம் செவியைச் சார்ந்திருக்குமானால், உலகத்தைச் சீர்படுத்த வருபவர்கள் வேறேதேனும் விளம்புதற்கன்றோ தேடல் வேண்டும்.

விலைகூறிக்கொள்பவர்க்கு இவ் வித்தக வாசகங்கள் இடையூறுகளாய் விளையும், அதற்கென் செய்

வது! விலைமதிப்பரிய வித்தகர்கள் சந்தைக்கடையைச் சார்ந்து நிற்பார்களோ! எந்தத் துரோகம்செய்தாலும் செய்க; அறிந்தோ அறியாமலோ செய்யும் பொது ஜனத் துரோகம் கொடிது, கொடிது!

பிரான்ஸ் தேசத்து அறிஞர் ரோஸ்ஸோ என்பவர், கல்வியைப்பற்றித் தாம் எழுதியிருக்கின்ற வோர் அரிய நூலின் முதல் வாக்கியம் என்றும் நினைவிற் கொள்ளத் தக்கது.

God makes all tevngs good; man meddles with them and they become cnil.

இதனைக் கருத்துட்கொண்டு, அச்சமுடன் ஒழுகிச் சும்மா விருப்பார்களாயின், பூரி சங்கராசாரிய ஸ்வாமிகள் கூறியபடி, "மேல் மேல் நெருப்பு மூட்டுவதை நிறுத்தினால் கொதித்திருக்கும் நீரானது தானே ஆறித் தண்மை அடைந்துவிடும்."

நான் கண்ட உலகம்

[270-வது பக்கத் தொடர்ச்சி]

'மார்கழித் திங்கள். பகலவன் இளநிலா வெனக் கதிர்பரப்பிக்கொண்டிருக்கின்றான். காற்றுமிக இனிமையாக வீசுகின்றது. வாடைக்காற்று மன்று; மேல் கீழ் காற்று மன்று; தென் திசைக் காற்று! ஆம் தென் திசைக் காற்றே; எனக்குத் தமிழ்மொழியில்தான் சிறிது பயிற்சியுண்டு; மற்றைய மொழிப் புலவர்கள் தென்றலைப் பற்றி என்ன கூறுகின்றார்கள் என்பது அறியேன். தென்றல் தமிழ்ப் புலவர்களில் ஒருவருடைய நாவினின்றும் தப்பியதில்லை. "புலவர் நாவிற் பொருந்திய தென்றல்" என ஒருபுலவர் தென்றலைச் சிறப்பித்துச் சொல்கின்றார். மார்கழி மாதத்தில் சூரியன் இளநிலாவைப்போல் கதிர்பரப்பத் தென்றல் இனிமையாக வீசுகிறது. நான் ஆகாயத்தில் பறந்து செல்கின்றேன். காற்றில் மிதந்து செல்கின்ற தற்கால நவீன கப்பல்களின் உதவியினால் அன்று; எனது இரு தோள் புறத்தும் விரிந்து விளங்கும் சிறகின் உதவியினால் நான் பறந்துசெல்கின்றேன். "என்ன இன்பம்! என்ன இன்பம்! பகல்முழுவதும் பறவைகள் வானத்தில் பறந்துகொண்டிருக்கும் பொழுது அவைகளுக்கு அயர்வுதான் ஒருபோதுந் தோன்றாதா என நான் நினைப்பது உண்டு. இப்பொழுது அவ் ஐயம் இல்லை. பறந்து செல்லச்செல்ல எனக்குஉற்சாகம் மிகுந்தது. நீரில் மிதப்பதென்றால் நமக்கு எவ்வளவு கடினமாக இருக்கிறது? வானத்தில் அப்படி இல்லை; மிகஎளிது; கரையற்ற மகிழ்வு! என்னைக் கண்டதும் பறவைகள் அஞ்சி ஓடும் என நினைத்தேன். ஆனால் அவை என்னோடு நெடுநாட் பழக்கமுடையனபோல் என்னைச் சூழ்ந்து இன்னிசை பாடிக்கொண்டு பறந்து வந்தன. ஆகா ! என்ன குரல்! எவ்வளவு இனிமை ! நாரதன் வீணை, கண்ணன் குழல் என்று சொல்கின்றனரே, அவற்றால் என்ன பயன் ? பலவகைப் பறவைகளின் இனிய ஒலி என் மனதை உருக்கிவிட்டது. நான் எங்குச் செல்லக்கருதிப் பறந்துகொண்டிருக்கின்றேன் என்பது நினைவில்லை. இன்பம் தருகின்ற காட்சிகளைப் பார்த்துக்கொண்டே, சிறகை அசைத்தசைத்து மிகப் பரந்த வானில் பறந்துசெல்கின்றேன். அங்கங்கே நீர்நிலைகள் பளிங்குபோல் தோற்ற மளித்தன. எனது சிறகுகளைக் குவித்துக்கொண்டு ஒருபெரிய குளக்கரையில் இறங்கினேன் ! பலவகை நிறங்களும் உருவமும் உடைய பறவைகள் நீரில் நீந்திக்கொண்டிருந்தன. தாமரையும் குவளையும் மலர்ந்து அழகுடன் பொலிந்தன. அவற்றில் அன்னப் பறவைகள் இணைஇணையாக வீற்றிருந்த தோற்றம் மிக அருமைவாய்ந்தது. "அன்னப் பறவையென ஒன்றில்லை. புலவர் கற்பனை" எனச் சிலர் கூறுகின்றனர். அவர் கூற்று முற்றிலும் பொய்.நான் அங்குநேரிலேயே கண்டேன். அதற்குஒப்பாக வேறு பறவையைச் சொல்வதற்கில்லை; அன்னம் அன்னத்தைப் போலவே இருந்தது. நாரைகள் நீரிற் குளித்துக் கரையில் இருந்து சிறகுகளை உலர்த்தின. அவற்றிடையே தவளைகளும் நண்டின் கூட்டமும் தத்தியும் ஊர்ந்தும் சென்றன. இங்ஙனம் அச்சமின்றி அவைகள் செல்வது "எம்மை உண்டு உங்கள் பசியை ஆற்றிக்கொள்ளுங்கள்" என்று வாய்திறந்து அழைப்பதுபோ லிருந்தது. ஆயினும் அந்நாரைகள் அவற்றில் ஒன்றையாவது பிடித்து விழுங்கவேண்டுமே; இல்லவே இல்லை. நீரில் ஊர்ந்துகொண்டிருந்த ஒரு பாம்பின்மேல் தவளைகள் தொகுதிதொகுதியாய்க் கூடி வீற்றிருந்தன. நீர் மிகத் தெளிவாக இருந்தது. இருகைநீர் அள்ளிப் பருகி, மேல் எழும்பிச் சென்றேன். மேகங்கள் தங்கும் சோலைகள் பல அங்கங்கே பொலியக் கண்டேன். ஒரு சோலையில் இறங்கினேன். மா, பலா, தென்னை முதலிய பலவகை மரங்கள் நிறைந்திருந்தன. அவற்றில் காய்களும் கனிகளும் கொத்துக் கொத்தாக விருந்தன. ஒரு மாம்பழத்தைநான் பறித்துத் தின்றேன். அதன் சுவை அமுதம் போன்றிருந்தது. அந்தச் சோலையின் வேறு ஒருபுறம் போனேன். மல்லிகை, முல்லை, புன்னை, கொன்றை, கோங்கு, வேங்கை, சண்பகம் முதலிய மலர்ந்து நறுமணமும் அழகும் ஊட்டின. அச் சோலையின் ஒருபால் ஓர் இனியஒலி உண்டாயிற்று. நான் அங்குச்சென்று பார்த்தேன். ஒரு குயில் கூவிக்கொண்டிருந்தது. தமிழ்ப் புலவர்கள் தென்றலை மறப்பினும் குயிலை மறவார். அக்குயிலின் இன்னிசைக்குப் பொருந்த ஒரு மயில் சிறகை விரித்தாடிற்று. வேறு பறவைகள் மரக்கிளைகளில் தொகுதி தொகுதியாய்க் கூடியிருந்து கூவின. மந்தியும்கடுவனும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாவாய்க் கிளைக்குக் கிளை தாவின. இன்பந்தரும் இத்தோற்றங்களைப்பார்த்து மகிழ்ந்து, அச்சோலையின் பிறிதொருபால் சென்றேன். பிறகு,மிகத் தெளிவான நீர்ப்பெருக்கையுடைய ஓர் ஆற்றின் கரையை அடைந்தேன். நீரோட்டம் என்பது இந்த ஆற்றிற்குப் பொருந்தாது; நீர் அசைவு என்றே சொல்லவேண்டும். நீர் மிக அமைதியாக ஒலி யடங்கி ஓடிக்கொண்டிருந்தது. வானுற வளர்ந்த சோலை, பறவைகளின் தீங்குரல், தெளிந்த நீர்ப்பெருக்கையுடைய ஆறு; இவ் வழகிய காட்சி என் மனதைக் கவர்ந்தது: ஆற்றின் கரையில் பசுக்களும் மான்களும் கூட்டங் கூட்டமாயிருந்தன. அவற்றின் இளங்கன்றுகள் துள்ளிக் குதித்து இங்குமங்கும் ஓடின. என்னைக் கண்டஅளவில் மானிரைகளும் கன்றுகளும் அஞ்சி ஓடிவிடும் என்று நினைத்து

அவை அறியாவாறு மறைந்து சென்று அருகடைந்து அவற்றின் அழகைக்கண்டு கரைகடந்த மகிழ்ச்சியுற்றிருந்தேன். பின்புறமிருந்து எனது கால்களை யாரோ வருடுவது போலிருந்தது. பொருக்கெனத் திரும்பிப் பார்த்தேன். மான்கன்றுகள்! அவ்விளமான் கன்றுகள்தாம் எனது காலை நாவால் நக்கின. நான் கரையற்ற மகிழ்ச்சியோடு அவற்றின் முதுகைத் தடவிநின்றேன். மானிரையும்பசுக் கூட்டமும் என்னையணுகித் தலைநிமிர்ந்துமெல்லென மெல்லெனப் பார்த்தன. அத்தோற்றம் அவைகள் என்னை வரவேற்பது போலிருந்தது! ஆற்றில் யானைகள் நீந்தி விளையாடிக்கொண்டிருந்தன. இவற்றை யெல்லாம் கண்ட மகிழ்ச்சியால் என்னை மறந்தவனாய் ஆற்றின் கரைவழியே சென்றுகொண்டிருந்தேன். எனக்கு முன்னால் புலிகள் தொகுதி தொகுதியாய் மரநிழலில் படுத்திருந்தன. மிக அருகில் சென்று பார்த்தபின்புதான் அவற்றைப் புலி யென்று அறிந்துகொண்டேன். எனக்குச்சிறகிருப்பதால் யான் அவைகளிட மிருந்து எளிதில் தப்ப முடியும் என்பதை மறந்து, எத்திசை ஓடி உயிர் தப்பலாம் என்று நாற்புரமும் பார்த்தேன். ஐயோ! என் பின்புறமும் உழுவையினங்கள் நின்றுகொண்டிருந்தன. இனிப் பிழைக்க வழியில்லை என மனம் அழிந்தேன். அச்சமயத்தில் என் சிறகு நினைவு வந்தது. சிறிது துணிவோடு அவை படுத்திருந்தஇடம் அடைந்தேன். அவை என்னைப் பார்த்து உறுமி அச்சமூட்டவில்லை; ஆடுகள்போலப் படுத்திருந்தன. என்ன சொல்வேன்! பெண் புலிகளின் முலைக்காம்பை மான் கன்றுகள் சுவைத்துக்கொண்டிருந்தன. இந்தக் காட்சியை என் மனம் ஒப்பவில்லை. கனவோ என ஐயுற்றேன். எனது கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். உண்மை, உண்மை! பெண் புலிகளிடத்தில் மான் கன்றுகள் பால் அருந்தின. எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் அன்புத் திரளைக் கண்ணுற்றேன். ஆண்டவன் பேரருளை வழுத்தினேன். மாக்கள் நிலைமை இப்படியானால் மக்கள் நிலைமை எப்படியோ என உள்ளம் பூரித்து வானில் எழும்பிச் சிறகடித்துச் சென்றேன். சிறிதுதூரம் சென்றதும் கீழே ஒரு சிற்றூர் புலனாயிற்று. அவ்வூரின்கண் பல இடங்களினின்றும் புகை எழும்பிக்கொண்டிருந்தது. அவ்வூரைக் காண என் மனம் விழைந்தது; கீழ்இறங்கினேன். ஊரையணுகியதும் ஒலி முழக்கம் என் செவியைத் துளைத்தது. என் சிறகுகளைக் குவித்து தரையில் நடந்து சென்றேன். ஊருக்கு வெளியே சிலர் பயிரின் கதிர்களை அறுத்துக் கொண்டிருந்தனர். என்னைக் கண்டதும் அவர்கள் என்பால் அணுகி,, 'ஐயா சிறிது இங்கு அமருங்கள். எங்கட்கு இப்பொழுது வீட்டிலிருந்து உணவுவரும், வந்ததும் உண்டுசெல்வீர்கள்'' என்று வழிமறித்தனர். யான் அவர்களிடத்து ஏற்றன சொல்லிப் பிரிவது அருமையாக முடிந்தது. ஊர்க்குள் நுழைந்தேன். ஒரு வீட்டின் நடுமுற்றத்தில் அமைத்த பந்தலில் அந்தணர் பலர் மந்திரம் ஓதி வேள்வித்தீயில் நெய் சொரிந்துகொண்டிருந்தனர். நீர்க்காவி உடை, உடலின் தூய்மை, பன்னிரு திருநாமம் (திருமண்) திருநீற்றுப்பூச்சு இவைகள் அவர்களின் தூய்மையைக் காட்டின. ஒருபால் துவாதச திருநாமம், பிறிதொரு பால் உடல்முழுதும் திருநீற்றுப்பூச்சு! இருவகையினரும் சிறிதும் வேற்றுமையின்றி மந்திரம்ஓதி, ஓமம் வளர்த்தனர். வேள்விக்கு, பசுவோ, ஆடோ, பிறவுயிரினங்களோ பலியிடுதல் என்பது ஆங்குக் காணேன்; அங்கு வேள்விக்குப் பலியானது நெய்தான். அந்தணர்களின் ஆடம்பரமற்ற தோற்றமும், மந்திரம் ஓதும் திறமையும் கண்டு பரவசமெய்திய யான் "இறைவன் திருவோலக்கங்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற இடம் இதுதானோ" என்று நினைத்துத் தரையில் விழுந்து வணங்கினேன். அவர்கள் அனைவரும் தங்கள் திருக்கரத்தை உயரத்தூக்கி என்னை வாழ்த்தினர். பேரின்ப நிலையை அடைந்துவிட்டதுபோல் மகிழ்ந்தது என்மனம். பின்பு வேறு ஓர் இடம் சென்றேன். அங்கும் இவ்வாறே நிகழ்ந்தது. பின்னர் அவ்வூரைப் பிரிந்து உயரப் பறந்துசென்றேன். நெடுந்தூரம்சென்றேன். எனக்குச் சிறிது அயர்வு தோன்றிற்று. இனி ஓரிடத்தில் சில நாழிகை ஓய்வுபெற்றுச் செல்ல நினைந்தேன்.

அச்சமயத்து நெடுந்தூரத்தே ஒரு நகர் தோன்றிற்று. அதனையும் பார்த்துவிட்டு ஓய்வுபெறலாம் என்று அந்நகரை நோக்கிப் பறந்து சென்றேன். மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் உயர்ந்து விளங்கும் அப் பட்டினம் அடைந்தேன். அந்நகரின் எல்லாப் பகுதியும் எனது ஐம்புலன்களையும் ஒருங்கே இழுத்தது. இதைக் காண்பதா, அதைப் பார்ப்பதா என்று தடுமாற்றமடைந்தேன். அனைத்தும் அத்துணையழகு! அத்துணையருமை! மக்கள் நடமாட்டம் மிகுந்து கண்களைக் கவரும் கடைத்தெருவடைந்தேன். கொள்வனவும் கொடுப்பனவும் அன்புக்கயிற்றால் பிணிக்கப் பட்டிருந்தது.

"ஐயா, வியாபாரியே! இது என்ன விலை?"

"விலை நான்கு ரூபாய்; நீங்கள் மூன்று ரூபாய் கொடுங்கள்."

"வேண்டா ஐயா, உங்களுக்கு ஒரு சிறிதாவது ஊதியம் தராதுபெற விருப்பம் இல்லை; இதோ ரூபாய் ஐந்து"

"அன்புள்ள ஐயா! எனக்கு ரூபாய் ஆயிரம்வேண்டியிருக்கிறது. நூற்றுக்கு ஒரு ரூபாய் வட்டிவீதம் கொடுத்துதவ வேண்டுகிறேன்"

"வட்டியா, கொடுமை, கொடுமை! இலவசமாக ஆயிரமன்றி இரண்டாயிரம் வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளுங்கள்; பாண்டும் வேண்டா, பத்திரமும் வேண்டா."

எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. இத்தகைய காட்சிகளைப் பார்த்துக்கொண்டே சென்றேன். ஒரு பெரிய மாளிகையின் முன்றிலை அடைந்தேன். அங்கு நின்றிருந்த ஒருவர், "ஐயா, நீங்கள் யார்? அரசர் பெருமானைக் காணவேண்டுமோ? என வினவினர். "அன்புடையீர், நான் இந்த நாட்டிற்குப் புதியவன். அரசர் பெருமானைக் காண்பது அத்துணை யெளிதா?" என்னலும் "நன்கு வினவினீர். அனைவர் அன்பிற்கும் அரசர் பெருந்தகை தமது மனத்தையும் செவியையும் திறந்து வைத்திருக்கின்றார்." என்றனர்.

"அங்ஙனமானால் நான் காண விழைகின்றேன்."

உடனே அவர் என்னை உள்ளே விடுத்தார். பல வாயில்களைக் கடந்து ஓர் பெரிய மன்றம் அடைந்தேன். என் மனத்தைக் கவர்ந்து பொறாமை யளிக்கும் தோற்றம் ஒன்றும் அங்கில்லை. அரியாசனத்து அமர்ந்திருந்த அரசர் என்னைக் கண்டதும் வரவேற்று உபசரித்தார்.

அவருக்கு இருக்கும் அளவற்ற தொழில்களில் எண்ணிறந்த மக்களில் புல்லனாகிய என்னையும்ஒருபொருளாகமதித்து வரவேற்று உபசரித்தார். அரசரிடத்து ஆடம்பரத் தோற்றம் ஒன்றுமில்லை. ஓர் எளியவர் போலவே இருந்தார். "அன்புள்ள சிறுவ, என்னால் உனக்கு யாதாயினும் ஆகவேண்டுமாயின் கூறு," என்றார் அரசர். அவர் பேரன்புத் திறனை நினைந்து மனங்கரைந்து கண்ணீர் மல்க, "பிரபுவே, தங்களைப் பெற்றுள்ள இவ்வுலகில் குறையுடையோரும் உளரோ? தங்களைத் தரிசிக்கும் பேறே அடியேற்கு இவ்வுலகில் குறைவாயிருந்தது. இன்று நிறைவுற்றது" என்று வணங்கி அவரிடம் விடைபெற்றுப் பிரிந்தேன். இனி எனது மனதைக் கவர்ந்தன. நெடுந்தூரத்தே செல்வாரையும் தன்னருகே அழைக்கும் பொலிவுபெற்ற கோபுரங்கள். அவை நகருக்கு அருகே ஒரு சோலையின் நடுவில் அமைந்திருந்தன. அங்கு நடந்தே சென்றேன். சென்று சோலையை அடைந்ததும் ஒரு பெரிய மரநிழலில் பரப்பிய மணல்மேல் சிறுவர் பலரும், ஓர் பெரியவரும் அமர்ந்திருந்தனர். அப்பெரியவர், நகைமுகத்தோடு "இறைவனால் படைக்கப்பட்ட இவ்வுலகம் புண்ணிய உலகம்; அவரால் ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் ஒன்றற்கொன்று உதவியோடு ஒற்றுமையாக வாழ்வதற்கே படைக்கப்பட்டன. புலியும் பாம்பும் தீமையே புரிபவை என்று முடிவுசெய்தல் கூடாது. இறைவன் அருளால் தோன்றியவை தீமையைச் செய்யவும் கருதுமோ? தன்னை நெருப்பினின்றும் தப்புவித்த நளனையே அப் பாம்பு கடித்ததும், முதலில் அவன் பாம்பின் செயலைத் தீமை யென்று நினைத்தான். ஆனால் பின்பு அப்பாம்பின் சொற்களால் நன்மை தரப்போவதை உணர்ந்தான். ஆதலால் சிற்றறிவினராகிய நாம் பேரறிவுப் பிழம்பாகிய இறைவன் திருவருட் குறிப்பை உணர்தல் இயலாது," என்று தொடங்கிச் சிறுவர்களைப் பார்த்துக் கூறிக்கொண்டிருந்தார். நான் "இது வேதாந்த மடமோ" என்று ஐயுற்றேன். அது பொழுது அவ்வழியே வந்த ஒருவரால் "கல்விச் சாலை" என அறிந்து வியப்புற்றேன். சிறுவர்கள்கையில் ஓலைச் சுவடியும் இல்லை; காகிதப் புத்தகமும் இல்லை. ஆசிரியர்க்கு முகத்தை அழகு படுத்தும் மூக்குக் கண்ணாடியில்லை. கையில் பிரம்புமில்லை. அவ்விடம் நீங்கிக் கோபுரவாயிலை யடைந்தேன்.

அங்கே நீர் நிறைந்த ஓர் வாய்க்கால் இருந்தது. அதில் கை கால் கழுவி, கோபுரவாயிலுட் சென்றேன். எல்லா இடங்களும் மிகத்தூய்மையாக இருந்தன. இன்னுஞ் சிறிது உட்புறம் நாடிச்சென்றேன். உள்ளும்புறமும் ஒருங்கே தூய்மைபெற்ற உத்தமர்கள் தேவாரதிருவாய்மொழிப் பாக்களைப் பண்ணோடு ஓதி வணங்கினர்; வடமொழி வேதத்தை இசை கூட்டிச் சொல்லித் துதித்தனர். அவர்கள் அணி அணியாய் நின்று எம்பெருமான் திருநாமங்களை நாவாற் சொல்லி மனதாற் சிந்தித்து சிரம்வணங்குந் தன்மை என் மனதை உருக்கிவிட்டது. கருநிற உடலினரும், செந்நிற உடலினரும் இருவகை நிறங் கலந்த உடலினருமாகப் பலவகைப் பெரியார் ஆங்கிருந்தனர். எனது ஐயன் எழுந்தருளியுள்ள அக் கோவிலில் வேற்றுமையின்றி ஒற்றுமை யுணர்வோடு நின்று துதித்திருந்த அந்தக் கூட்டத்தினரில் கரியநிறம் உடையவர்மேல் என் பேதையுள்ளம் சென்றது. அவர்கள் யார் என அறிய விழைந்தேன். அங்கு எனக்கு அறிமுகமானவர் ஒருவருமில்லை. எனினும் என் அருகே நின்ற ஒருவரை அழைத்து, கரியநிறம் உடையவர்களைக் குறிப்பால் உணர்த்தி "அவர்கள் யார்?" என வினவினேன். "அவர்கள்தாம் ஆதி மக்கள். கடல்நிற வண்ணனாகிய எம்பெருமானது திருமேனி வண்ணம்போல் இவர்களிற் பெரும்பாலார் கருமை நிறம் வாய்ந்திருப்பதால் 'இவர்கள் ஹரிஜனங்கள்' என்று அழைக்கப் படுபவர்கள்" என்றார். உடனே எனக்குக் காந்தியடிகளின்மீது சிந்தை சென்றது. எம்பெருமான் கருணைத் தடங்கடல் "அர்ச்சாவதார"மாக இருக்கும் நிலையைக் கண்டு, என்னை மறந்து இருகரங்களைக் கூப்பித் திருவாய்மொழியைப் பண்ணோடுபாடி வணங்கினேன். இக்கோவிலில் நிறுவியுள்ள விக்கிரக நிலை புதிய முறையில் அமைந்திருந்தது. அகலிகையின் சாபவிமோசனத்தைக் காட்டுவதாகும் இது. ஸ்ரீராமபிரான் திருவடி ஒரு கல்லின் மீதுபட்டதும், அக்கல்லினின்று ஒரு பெண்கொடி எழுந்து வணங்கவும், அம் மங்கைநல்லாளை இராகவன் "வாழி நீடூழி" என்று வாழ்த்துவது போலவும் அமைக்கப்பட்டிருந்தது. வேறு எந்தக் கோவிலிலும் நான் இவ்வாறு கண்டதில்லை. "இறைவன் அனைவர்க்கும் உரியவன்; பிழை செய்தாரையும் மன்னித்து ஆட்கொள்ளுபவன்:" என்பதை விளக்க அமைக்கப்பட்டது போலும் இம்முறை. நான் எம்பெருமானது கருணைப் பெருக்கையும், மற்றவர்களின் மனத் தூய்மையையும் வியந்து புகழ்ந்து நின்றேன். அச்சமயம் ஒரு பெரு முழக்கம் என் மனதைக் கலைத்தது. கண் விழித்துப் பார்த்தேன். பகலவன் உதிக்கும் நேரம். என் மன இன்பத்தைக் கலைத்த பேரொலி வீதியில் கேட்டது. என்னவென்று எழுந்து ஓடிப் பார்த்தேன். கொடுமை, கொடுமை, தீண்டாதார் இருவர் காலில் செருப்போடு தாம் வசிக்கும் தெருவில் நுழைந்துவிட்டதற்காக வைதிகரும் அவர்கட்கு உரியவரும் அவ்விருவரையும் பலவாறு இகழ்ந்து பேசிக் குறுந்தடியால் அடித்துத் துரத்திக்கொண்டிருந்தனர். "ஐயோ" பாவ உலகமே" என்று வாய் திறந்து புலம்பினேன்.

எமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[255-வது பக்கத் தொடர்ச்சி]

கூ

832 கூடலான் பெண்ணொடு கூடுதலுங் குறியு
மதுரையு மெனவே வழுத்த லாகும்.

833 கூடமலை யுச்சியு மறைவும் பொய்யும்
வஞ்சமுஞ் சம்மட்டியும் கூடமுங் கூட்டமும்
அண்டமும் யானையின் நிலையு மில்லும்.

834 கூட்டங் கூட்டமும் பிண்ணாக்கும் மூணும்
குன்றின் முடிவுங் கூற லாகும்.

835 கூத்த னுயிரும் நடனு மாகும்.

836 கூந்தல் பெண்குழலுங் கமுகுமயிற் பீலியும்.

837 கூரல்பெண் மயிரும் [1]புட்சிகு மாகும்.

838 கூரே கூர்மையு மிகுதியு மாகும்.

839 கூல நீர்க்கரையும் வரம்புங் குரங்கும்
பாகலு மாவணமும் பசுவுமங் காடியும்
விலங்கின் வாலும் பண்ணிகாரமும்.

840 கூவிரந் தேரின் கொடிஞ்சியும் குவளையும்
தேரு மெனவே செப்ப லாகும்.

841 கூவுதல் கரைதலும் பேசுதலு மாகும்.

842 கூழை புட்சிறகும் பெண்மயிரும் பொன்னும்
படையுறுப்பு நடுவுங் குரலும் பாம்பும்
சேறும் கூழையும் பீலியுங் கூறுவர்.

843 கூழ்பல வுணவும் பயிரும் பொன்னும்.

844 கூளி சுற்றமும் பேயு மெருதும்
பூதமுங் குறளனு நட்புந் தொகுதியும்
வீரனு மெனவே விளம்ப லாகும்.

845 கூளியர் நண்பரும் வீரருங் குறவரும்
பூத வீரரும் புகல லாகும்.

846 கூற்று வார்த்தையும் பங்குங் காலனும்.

847 கூனல்வெண் சங்குங் கூனலு மாகும்.

கெ

848 கெடுதல் சாய்தலு மவிதலு மாகும்.

849 கெழுவுதல் பற்று மயக்கமு மாகும்.

கே

850 கேகய மசுணப் புள்ளுமோர் பண்ணும்
வில்லு மஞ்ஞையும் விளம்ப லாகும்.

851 கேசமாண் மயிரும் பெண்பான் மயிரும்
அஃறிணை மயிரு மறைய லாகும்.

852 கேசரம் வண்டும் பூந்தாது மகிழும்.

853 கேடகம் பலகையும் பரிசையு மூரும்
சிங்கா சனமுஞ் செப்ப லாகும்.

854 கேடம் கிளியு மாறு மாகும்.

855 கேட்டை யசைச்சொல்லுங் கேட்டையு முகடியும்.

856 கேதார மஞ்ஞையு மோரூரு மாகும்.

857 கேது செம்பாம்புங் கொடியுமோர் நாளும்
நெருப்பு மெனவே நிகழ்த்த லாகும்.

858 கேவலந் தனிமையு முத்தியு மாகும்.

859 கேழல் யானையும் பன்றியு மாகும்.

860 கேழே நிறமு மொளியு மொப்பும்.

861 கேள்வி கல்வியுஞ் செவியும் யாழும்.

862 கேளே நட்புங் கிளையுங் கணவனும்.

கை

863 கைக்கிளை யாழ்நரம்பு மொருதலைக் காமமும்.

864 கைத்தல் சினமுங் கசப்பு மாகும்.

865 கை துவாமை கையொழி யாமையும்
படை விகற் பமுமெனப் பகர லாகும்.

866 கைத்துப் பொன்னும் வெறுப்பு மாகும்.

867 கைபடை வகுப்பு மொழுக்கமுங் கரமும்
சிறுமையுங் குற்றமுந் தங்கையுஞ் சார்பும்
ஒப்பனையு மிடமு நஞ்சு மாகும்.

கொ

868 கொக்குமா மரமுங் குரண்டமு மூலமும்
குதிரையுஞ் செந்நாயுங் கூற லாகும்.

869 கொக்கரை வில்லுஞ் சங்கும் வளையும்
பாணியு மெனவே பகர லாகும்.

870 கொங்கு மலர்த்தாது மணமுந் தேனும்.

871 கொச்சை கொச்சையும் வெள்ளாடு மாகும்.

872 கொச்சி கொச்சியுந் [2]தீவு மாகும்.

873 கொட்புத் திரிதலுஞ் சுழற்சியு மாகும்.

874 கொடுப்பை குன்றருவியுந் தாம்பையுங் குளமும்
பச்சிலை யுமெனப் பகர லாகும்.

875 கொடிகரும் பிள்ளையும் வல்லியுந் துவசமும்
ஒழுங்கு மெனவே உரைக்க லாகும்.

876 கொடியன் கேதுவுங் கொடியனு மாகும்.

877 கொடிறு பூசமுங் கருவிப்பற்றும்
கதுப்பு மெனவே கழற லாகும்.

878 கொட்டி [3]பார்த்திடு குறியுங் கூட்டமும்
வாயிலுங் கூத்தும் வழங்க லாகும்.

879 கொண்டை மயிர்முடியு மிலந்தைக் கனியும்.

880 கொண்மூ விண்ணு மேகமு மாகும்.

881 கொண்டல் கீழ்காற்று மேகமுங் கூதிரும்.

882 கொந்தளம் பெண்மயிரும் குருளைமயிர்க் கொத்தும்.

883 கொப்பர முன்கையு மல்லடையு மாகும்.

884 கொம்புவீழ் சினையு முட்டையு மாகும்.

885 கொம்மை கைகுவித்துக் கொட்டலு மிளமையும்
முலையும் வட்டமுந் திரட்சியுங் கொம்மையும்
அழகுந் திட்டையும் [4]வலியு மாகும்.

886 கொல்லை கொல்லையுஞ் [5]சோலையு மாகும்.

887 கொல்கொலைக் கேவலு மசையும் வருத்தமும்
ஐயமுங் கருங்கொலுஞ் செங்கொலு மாகும்.

888 கொல்லியோர் பண்ணுமோர் வெற்பு மாகும்.

889 கொற்றம் வெற்றியு மரசியலு மாகும்.

890 கொற்றி கோவிளங் கன்றுந் துர்க்கையும்
கொற்றியு மெனவே கூற லாகும்.

891 கொன்பய னில்லாச் சொல்லும் பொழுதும்
பெருமையு மச்சமு மிடைச்சொல்லு மாகும்.

கோ

892 கோகிலம் பல்லியுங் குரங்குங் குயிலும்
துவாரமு மெனவே சொல்ல லாகும்.

893 கோசமாண் குறியு முறையு முட்டையும்
பண்டா ரமுமதி லுறுப்பும் பகருவர்.

894 கோசிகஞ் சாம வேதமுங் கூறையும்
பட்டா டையுமெனப் பகர லாகும்.

895 கோடகம் புதுமையு முடியுறுப்புங் குதிரையும்.

896 கோடியோ ரெண்ணும் புதுமையுந் துகிலும்.

897 கோடைவெண் காந்தளுங் குதிரையும் வேனிலும்
மேல்காற்று மென்ன விளம்ப லாகும்.

898 கோடு சங்கு மூதுங் கொம்பும்
கொடுமுடியுங் கரையும் வரம்புங் குன்றும்
மாட்டின் கொம்பும் விலங்கின் கொம்பும்
மரத்தின் கொம்பும் வழங்க லாகும்.

(பிரதி—1. புட்சிக்கு.

(பிரதி) 2. தீயு. 3. வார்த்திடு. 4. வடையு. 5. செல்லையு.

899 கோட்ட நீர்நிலையும் படப்பையுங் கோவிலும்
அவ்விய மும்பசுக் கூட்டமு நகரும்
கோடபதியு நாடுங் குரங்கும் நறங்கும்
குரவும் வாசமுங் கோணமுங் குளமும்
உண்கலமும் வயலு முரைக்க லாகும்.

900 கோடிகங் கெண்டியுந் துகிலும் பூந்தட்டும்.

901 கோடல் காந்தளும் சமழ்த்தலுங் கொள்ளலும்
வளைத்தலு மெனவே வழங்க லாகும்.

902 கோடரங் குரங்குங் குதிரையுஞ் சோலையும்
கொம்பு மயிர்ச்சாந்து மரப்பொ தும்பரும்
தேர்மொட்டு மெட்டியுஞ் செப்ப லாகும்.

903 கோட்டி சபையும் கோபுர வாயிலும்
கூத்தின் கோட்டியுங் கூற லாகும்.

904 கோணம் வாளு மூக்குங் குதிரையும்
அங்குச முமென வறைய லாகும்.

905 கோணல் வளைவுஞ் சிந்துங் கூனும்
மாறு கொளலும் வழங் கலாகும்.

906 கோதை கைக்கட்டியு மாதருங் குழலும்
மாலையுங் காற்று முடும்புஞ் சேரனும்.

907 கோத்திரம் பூமியும் குலமும் மலையும்.

908 கோபாலர் மாலு மிடையரு மாகும்.

909 கோமான் பன்றியும் மூத்தோனு மாகும்.

910 கோரம்பூ மொட்டுஞ் சோழன் குதிரையும்
கொடுமையும் வட்டிலும் கூற லாகும்.

911 கோல மொப்பனையுங் கொழுந்து நீரோட்டமும்
பீர்க்கு மழகும் பன்றியும் கோலமும்
பாக்கு மிலந்தையு மிலந்தைக் கனியும்.

912 கோல்வாட் கோலுந் திரட்சியுங் கோலும்
ஈட்டியு மிரந்தையுங் குதிரையு மத்திகையும்
தந்திரியு மம்புந் துகிலிகையுந் துலாமும்
முட்கோலு மஞ்சனக் கோலுஞ்செங் கோலும்.

913 கோவன் வசிட்டனு மீசனு மாகும்.

914 கோழி யுறையூருங் கோழியு மாகும்.

915 கோளி யாலு மத்தியுங் கொழுஞ்சியுங்
பூவாது காய்க்கு மரமுங் கொள்வோனும்.

916 கோவிழியும் விண்ணுஞ் சுவர்க்கமும் பசுவும்
அம்பு நீருங் குலிசமுந் திக்கும்
பூமியு மன்னனுங் கிரணமு முரையும்
எவலுங் குன்று மியம்ப லாகும்.

யாப்பிலக்கணம்

[274-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்—கலிப்பா

சென்ற வார இதழில் கலிப்பாவிற்குரிய இலக்கணமும், அதன் வகையும், அவற்றுள் நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா இனையது என்பதும் கற்றோம். இவ்விதழில் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவைப் பற்றிக் கற்போம் :

2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா :—கரை சாரக் கரை சார ஒருகாலைக் கொருகாற் சுருங்கி வரும் நீர்த்தரங்கம்போல அளவடி சிந்தடி குறளடி ஆகிய அசையடிகளைத் தாழிசைக்கும் தனிச் சொல்லுக்கும் இடையில் அமைத்து, தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்து உறுப்பாற் பாடப்படுவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவாம் :

(a) அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

(தரவு)

கேடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர் சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
ஆர்புன லிழிகுருதி யகலிடமு முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்!

(தாழிசை)

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉம் தலைபனிப்பப்
புரைதொடித் திரள்திண்தோள் போர்மலைந்த மறமல் [லர்
அடியொடு முடியிறப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புக [ழாமோ?
கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ?
படுமணி இனநிரைகள் பரந்துடன் இரிந்தோடக்
கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்ததிறல் வேறாக [மோ
எருமலி பெருந்தொழுவின் இறுத்ததுநின் இகலா

(அம்போதரங்கம்)

இலங்கொளி மரகதம் எழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅல் நின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெங்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய்! புரையும் நின்னுடை.

[இவை நாற்சீர் ஈரடி இரண்டம்போதரங்கம்—பேரெண்]

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை.
தண்சுடர் உறபகை தவிர்த்த ஆழியை.
ஒலியியல் உவணம் ஓங்கிய கொடியினை.
வலிமிகு சகடம் மாற்றிய அடியினை.

[இவை நாற்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்-அளவெண்]

போரவுணர்க் கடந்தோய் நீஇ.
புணர்மருதம் பிளந்தோய் நீஇ.
நீரகலம் அளந்தோய் நீஇ.
நிழல்திகழைம் படையோய் நீஇ.

[இவை முச்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்-இடையெண்]

ஊழி நீஇ.	ஆழி நீஇ.
உலகு நீஇ.	அருளு நீஇ.
உருவு நீஇ.	அறமு நீஇ.
அருவு நீஇ.	மறமு நீஇ.

[இவை இரு சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்—சிற்றெண்.]

(தனிச்சொல்)

என வாங்கு,

(சுரிதகம்)

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழல் கொடும்பூண் பகட்டெழில் மார்பில்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்

தொன்று முதிர்கடல் உலக முழுதுடன்
ஒன்றுபு திகிரி உருட்டுவோன் எனவே."

இஃது எட்டும் பதினறு மென்று சொல்லப்பட்ட முச்சீர் அடியும் இருசீர் அடியும் நான்கும் எட்டுமாய்க் குறைந்து வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

(b) அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

(தரவு)

நலங்கிளர் திருமணியும் நன்பொன்னுங் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரிமான் எருத்தஞ்சேர் அணையின்மேல்
இருபுடையு மியக்கரசர் இணைக்கவரி எடுத்தெறிய
விரிதாமம் துயல்வரூஉம் வெண்குடைமூன் றுடணிழற்ற
வண்டரற்ற நாற்காதம் வகைமாண உயர்ந்தோங்கும்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனை
[யே.'

(தாழிசை)

ஒல்லாத பிறப்புணர்த்தும்
ஒளிவட்டம் புடைசூழ
எல்லார்க்கும் எதிர்முகமாய்
இன்பஞ்சேர் திருமுகத்துள்
ஏர்மலர மணிப்பொய்கை
எழிலாம்பற் பொதியவிழ
ஊர்களோ டுடன்முளைத்த
ஒளிவட்டத் தமர்ந்தன்றே?

கனல்வயிரங் குறடாகக்
கனல்பைம்பொன் சூட்டாக
இனமணி ஆரமா
இயன்றிருள் இரிந்தோட
அந்தரத் தருளுநின்
அலர்கதிர் அறவாழி
இந்திரனும் பணிந்தேத்த
இருவிசும்பில் திகழ்ந்தன்றே?

வாடாத மணமாலை
வானவர்கள் உள்ளிட்டார்
நீடாது தொழுதேத்த
நிறஞ்சேர்ந்த பெருங்கண்ணும்
முகிழ்பரிதி முகநோக்கி
முறுவலித் துண்ணெகிழ்ந்து
திகழ்தகைய குடைபுடைசூழ்
திருந்துகுழல் திளைத்தன்றே?

(அம்போதரங்கம்)

மல்லல் வையகம் அடிதொழு தேத்த
அல்லல் நீத்தங் கறப்புணை ஆயினை;
ஒருதுணி வழிய உயிர்க்கரண் ஆகி
இருதுணி ஒருபொருட் கியல்வகை கூறினை.

[இவை நாற்சீர் ஈரடி இரண்டம்போதரங்கம்]

ஏடலர் தாமரை ஏந்தும் நின்னடி;
வீடொடு கட்டினை விளக்கும் நின்மொழி;
விருப்புறு தமனியம் விளக்கும் நின்னிறம்;
ஒருத்தல் கூடுற உருற்றும் நின்புகழ்.

[இவை நாற்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்]

இந்திரற்கும் இந்திரன் நீ;
இணையில்லா இருக்கையை நீ;
மந்திர மொழியினை நீ;
மாதவர்க்கு முதல்வனும் நீ;
அருமைசால் அறத்தினை நீ;
ஆருயிரும் அளித்தனை நீ;
பெருமைசால் குணத்தினை நீ;
பிறர்க்கறியாத் திறத்தினை நீ.

[இவை முச்சீர் ஓரடி எட்டம்போதரங்கம்]

பரமன் நீ;	அருளும் நீ;
பகவன் நீ;	அறமும் நீ;
பண்ணவன் நீ;	அன்பும் நீ;
புண்ணியன் நீ;	அணைவும் நீ;
உரவன் நீ;	பொருளும் நீ;
குரவன் நீ;	பொருப்பும் நீ;
ஊழி நீ;	பூமி நீ;
உலகு நீ;	புணையும் நீ.

[இவை இரு சீர் ஓரடிப் பதினறம்போதரங்கம்]

(தனிச்சொல்)

எனவாங்கு,

அருணெறி ஒருவநிற் பரவுதும் எங்கோன்
திருமிகு சிறப்பில் பெருவரை அகலத்
தெண்மிகு தானைப் பண்ணமை நெடுந்தேர்
அண்ணல் யானைச் செங்கோல் விண்ணவன்
செருமுனை செருக்கறத் தொலைச்சி
ஒருதனி வெண்குடை ஓங்குக எனவே."

இதனுள் எட்டும் பதினறும் என்று சொல்லப்பட்ட உறுப்புக் குறையாமல் வந்தவாறு கண்டு கொள்க.

தேவகி

அத்தியாயம் 9.

[266-வது பக்கத் தொடர்ச்சி]

அன்றுமுதல் கோமளம் என்னுேடுமிக நெருங்கிப் பழகிவந்தாள். ஒழிந்த நேரங்களில் அடிக்கடி என்னறை வந்து வார்த்தையாடுவாள். ஒவ்வோர் வேளை தம் குடும்பம் உற்றுள நிலையையும், விஜயன் கட்டுக் கடங்காமல் திரிவதையும் பற்றிக் கூறுவாள். சேகரனும் அவன் மனைவியும் ஓர் பத்திரிகைநடத்துவதாகச் சொல்லி வஞ்சித்த விதமும், ஓர் மாதர் மஹாநாடு கூட்டியதால் பொருள் நஷ்டமடைந்ததையும் கூறிவருந்துவாள். கோமளம் இவ்வளவு உறவு தந்து பழகுவது எனக்குப் வியப்பையே விளைவித்தது. என் மாமன்குடும்பம் உற்ற நிலைக்கு மிகவும்வருந்தினேன். கோமளத்திற்குத் தேறுதல் கூறி, அடிக்கடி அவளுக்கு இராமாயணப் பாக்களைப் படித்துக்காட்டிவந்தேன்.

இன்னபடி ஒருவாரம் கழிந்தது. நாளாக நாளாக என் மனம் சித்தூரை நாடியது. மாமி எனக்கென்று வைத்திருக்கும் செய்தியை அறியவேண்டுமென்னும் ஆவலும் அதிகரித்தது. மாமியோ என்னை யழைக்கவில்லை. இனி என்ன செய்வது என்று தையம்மாளுடன் கலந்து யோசித்தேன். தையம்மாள், சமயம் பார்த்துச் சொல்வதாகவும் அப்பொழுது நானே நேரில் சென்று விஷயத்தைத் தெரிந்துகொள்ளலாம்

என்றும் கூறினள். நன்றென எண்ணி நான் அவ்விரவைக் கழித்தேன்.

பொழுது விடிந்தது; பகலும் வந்தது; பிற் பகலும் வந்துற்றது. ஒவ்வொரு நிமிடமும் தையம்மாள் வந்தழைக்கும் நேரமா யிருக்கலாகாதா என்று எண்ணியெண்ணி யேங்கினேன். என்ஏக்கம் அகலத் தையம்மாள் வந்து, "இனி உன் மாமி பிழைப்பது அரிது என்றே தோன்றுகின்றது. சுரவேகத்தினுல் பிதற்றுகின்ருள். உன்னையும் பற்றி இடையிடையே பிதற்றுகின்ருள்" என்று கூறி யழைத்தாள். மேன்மாடம் சென்று, மாமியின் அருகு சென்று நின்றேன். என்னைக் கூர்ந்துநோக்கி, "இன்னும் இங்கிருக்கின்றுயா? நன்று நன்று" என்றுகூறிச் சிரித்தாள். அவள் சிரிப்பு எனக்குப் புதுமையாய்யிருந்தது. "அடி பெண்ணே, எங்கு வந்தாய்" என்ருள்.

"எனக்கு நீ வைத்துள்ள செய்தியை அறிந்து செல்ல வந்தேன்," என்று கூறினேன்.

"அவசரமோ. இங்கு இருக்கப் பிடிக்கவில்லையோ? வெளியிலே போகப் பழகிய காலுக்குத் தினவு அதிகமாகத்தானிருக்கும். சற்றுப் பொறு. குடியொன்றும் கெட்டுவிடாது," என்ற முகவுரையுடன் என் மாமி ஆரம்பித்தாள்:—

"அடி, பெண்ணே, நான் இனிப் பிழைக்கமாட்டேன். காலனது நடமாட்டம் என் கண் முன்னே தோன்றுகின்றது. சந்தோஷ முறுவாய்......"

"ஒன்றுனக்குக் கூறிவிடவேண்டும். அது என் மனத்தை உறுத்துகின்றது. அதைக் கூருவிடில் நான் அமைதியுடன் சாக முடியாது."

"அடி பெண்ணே, தேவகி, உன் மாமன் இறக்கு முன் ஒருநாள், நீ துயின்றிருக்கும் வேளையில், உனது சிறிய தந்தை வந்துன்னை ஏற்கும் வரை இம்மனையில் நீ இருப்பதற்கு நான் இடையூருய் இருக்கலாகாதென்று சொல்லிச் சத்தியம் செய்யச் சொன்னர். சத்தியம் செய்தேன். இச்சத்தியம் தவறுமாயின் நானும்என்மக்களும்கேடுறுவோம்என்றும்சபித்தார். இச்சாபம் எங்களைச் சேரும்படி நீ யாருக்குந் தெரியாது ஓடிவிட்டாய். சொத்திழந்தேன். என் மக்கள் நலமிழந்தனர். நானும்உயிரிழக்கப்போகின்றேன். என் மனையில் வளர்ந்த நீ எமக்குச் செய்த நன்றி யிது."

"நீ இம்மனையினின்று நீங்கிய பின்னர் உன் சிறிய தந்தையினிடமிருந்து இரண்டாயிரம் ரூபாயும் ஒரு கடிதமும் வந்தது. அந்த ரூபாய், சேகரன் அடித்த கொள்ளையில் சேர்ந்து விட்டது. கடிதத்தையும் உன்னிடம் சேர்ப்பிக்கவில்லை. இனியும் என் மக்கள் கேடுரு வண்ணம் காக்கவே இதை உன்னிடம் கூற நினைத்தேன். கூறியும் விட்டேன். இனி நீ போய்வரலாம்." என்று முடித்தாள்

"விடை தந்தாய், போகின்றேன். என் தந்தையார் கடிதம் எங்கே. நான் பார்க்கவேண்டும்," என்று சொல்லத் தையம்மாளும் கோமளமும் தேடினர். கடிதத்தைக் காணவேண்டுமென்று என்னுள்ளம் துடித்தது. கடிதம் அகப்படவில்லை. அவ்வேளை விஜயன் அங்குவந்து, "கடிதமா தேடுகின்றீர்கள். அன்றே பல்பொடி மடித்துவிட்டேன்" என்று சொல்லிச் சென்றுன். 'அட பாவி,' என்றேன்; சோர்ந்து தரைசாய்ந்தேன். பணத்தைப்பற்றி நான் வருந்தவில்லை. என் சிறிய தந்தையார் கடிதத்தைக் காணமுடியாமற் போயிற்றே என்று கதறினேன். என் மாமிக்குக் கோபம் வந்துவிட்டது. 'அடி பிடாரி, நீட்டாதே வாயை. நீ பாவி, இல்லையேல் இவ்வீட்டை விட்டகன்று எம் குடும்பத்தைக் கெடுப்பாயா? உன்னை நான் வெறுக்கின்றேன். என் உயிர்உள்ளவரையில் உன்னைவெறுப்பேன்" என்று சீறினள்.

"அம்மா, புண்ணியவதி, நன்ருக வெறு. நீ என்னை வெறுக்கலாம். எனக்கு நீ இழைத்த தீமையெல்லாம் என் மாமன்பொருட்டு நான் மறக்கின்றேன். எனினும் என் தந்தையார் கடிதம் என் கை சேர வொட்டாமல் இம்மனையுளார் செய்த சதியை நான் ஒரு நாளும் மறக்கமுடியாது. இந்தச்செய்தியைச்சொல்ல என்னை வீணிற்கு அழைத்திருக்க வேண்டாவே" என்றுகூறி விட்டுக் கண்ணும் கண்ணீருமாய் என்னறை வந்து சேர்ந்தேன்.

அன்று இரவே அவளும் இறந்தாள். சவக்கிரியையும் முறையே நடந்தது. பதினைந்து தினங்கள் அங்கே தங்கிவிட்டுப் பின் சித்தூர் திரும்பினேன்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[271-வது பக்கத் தொடர்ச்சி]

(ii) முற்றுகர வோசையும், பொருள் வேறுபாடும்

குற்றியலுகரமாய்இசைக்கப்படும்ஒருசொல்லின்ஈறு, முற்றியலுகரமாய் இசைக்குமாயின், உடனே அச் சொல்லின் பொருள் வேறுபடுமென்பது ஆன்றோர் துணிபு. இதையெண்ணித் தொல்காப்பியனர், நுந்தை யென்னும் முறைப்பெயரின் உகரம் குற்றியலுகரமாயினும், முற்றியலுகரமாயினும், அச்சொல் ஒன்றே என்றும், பொருள்வேறுபாடு அடையாதென்றும் மொழிகின்ற சூத்திரங் காண்க:—

"முற்றிய லுகரமொடு பொருள்வே றுபடா
தப்பெயர் மருங்கி னிலையிய லான"

தொல் - மொழி மரபு 68.

என்பதற்கு நச்சினர்க்கினியர், "காது, கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமுங் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற்போல, நுந்தையென்று இதழ்குவித்து முற்றக் கூறிய விடத்தும், இதழ்குவியாமற் கூறியவிடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க" என்று உரை கூறுவார். இவற்றின் சிலவற்றை அப்பர் தேவாரத்தின் மொழிகளாலும் விளக்கலாம்.

கட்ட றுத்துக் கடிதெழு தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்பட முன்னமே
அட்ட மாமலர் சூடும்வாட் போக்கியார்க்
கிட்ட மாகி இணையடி யேத்துமே.

திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை.

இதில் "கட்டறுத்து" என்பதில் (கட்டு + அறுத்து) கட்டு என்பதில் உள்ள உகரம் குற்றியலுகரம் என்பது வெளிப்படை. மற்றும்,

கட்டு வாங்கங் கபாலங்கைக் கொண்டிலர்
அட்ட மாங்கங் கிடந்தடி வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி சென்றெய்திக் காணிய
பட்ட கட்டமுற் றாரங் கிருவரே.

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை 7.

என்னும் திருப்பாசுரத்தில் "கட்டு" என்பதன் ஈற்றுகரம் குற்றியலுகரமல்லாமல், முற்றுகரமே ஆவதுஏன் என்று மாணவர்களுக்குச் சந்தேகம் தோன்றுமாதலால், அதை இங்கு விவரமாய் ஆராய்வோம்:—

இந்தச்செய்யுளானது ஆங்கிலத்தில் (Trochee) டிரோகி யென்னும் அலகு முறையில் நிற்குமாதலால் வற்புறுத்தும் ஓசையுள்ள சீருக்குப் பின்னர் வற்புறுத்தா வோசையுள்ள சீர் மாறிமாறிவருவதைப் பாடும்போது காணலாம். ஆங்கில யாப்பு முறையில் விளக்குதல் தமிழ்ச் செய்யுளுக்கு மரபன்றென ஆட்சேபம் நேருமாதலால் நமது யாப்பிலக்கண முறையில் அலகிட்டுக் காண்போம். முதற் சீர்கள் நான்கும் ஒரே அளவு வாய்ந்தாலன்றி இசையில் ஓசை கெடுமென்பது யாவரும் அறிந்ததே. ஆதலால் 2, 3, 4-ம் அடிகளின் முதற்சீர்களின் அளவு நான்கு மாத்திரையாயின், முதலடியின் முதற்சீரும் மூன்று மாத்திரைக்கு அதிகப்படவேண்டுமென்பது நிச்சயம். இவற்றுள் 3-ம் அடியின் முதற்சீர் "சிட்டன்" என்பது நான்கு மாத்திரையளவாகும். * "சிட்" என்பது இரண்டு மாத்திரையும் 'டன்' என்பது இரண்டு மாத்திரையுமாக, "சிட்டன்" நான்கு மாத்திரையாகும். 2-ம் அடியின் முதற் சீரான "அட்ட" வென்பதும், 4-ம் அடியின் முதற்சீரான "பட்ட" வென்பதும்மூன்று மாத்திரை யளவில் நிற்கவில்லை. நாலாவது அடியை, "பட்டகட்ட" என்று சேர்த்து மொழிந்தாலன்றி, "பட்ட" என்பதன் ஈற்று அகரம் ஒரு மாத்திரை யளவுடன் நில்லாமல் இரண்டு மாத்திரை யளவுக்குக் குறையாது ஒலிப்பதை, சாதாரணமாய்ப் பாடும்போதே காணலாம்.

இவ்வகரமானது கீழ்வரும் கந்தபுராணச் செய்யுளில் "செய்த" என்னும் சொல்லின் ஈற்று அகரம் போல் ஒலிப்பது புலப்படும்:—

முந்தொரு காலத்தின் மூவுலகந் தன்னில்
வந்திடு முயிர்செய்த வல்வினை யதனாலே
யந்தமின் மறையெல்லா மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றார்.

என்னும் செய்யுளில் 'செய்த' என்பது நெடிலை அந்தத்தில் பெற்றதுபோல் மாத்திரை யளவு இசையில் பெறும்; குறிலைப் போல் மாத்திரை யளவு குறுக்கிப் பாடின் இசைகெடுமென்பது திண்ணம். மொழியின்

அந்தத் துறைகுன் றியவக் கரமே
சந்தத் தினினீ டியிராஞ் சமமாய்
வந்துற் றிடுசீர் கடையவ் வழியாஞ்
செந்தா மரைசேர் திருவா ணுதலே.

என்னும்விருத்தப்பாவியலின் விதியைக் கொள்க *.

இவ்வாறே மேற்கண்ட அப்பர் செய்யுளினும் "அட்ட", "கட்ட" என்னும் சொற்களின் ஈறு ஆகிய 'அ' என்னும் எழுத்து, குற்றுயிர் ஓசை பெற்று நில்லாமல் நெடிலோசையைக் கொண்டே ஒலிப்பது காண்க. எனவே, இம்மூன்று அடிகளினும் நான்கு மாத்திரை அளவு முதற் சீர்கள் பெற்று விளங்குங்காலை, முதற்சீரான 'கட்டு' என்பது நான்குமாத்திரை யளவுபெற்றே இசையின்கண் சற்றேறக்குறைய நிற்க வேண்டுமென்பதும் விதியன்றோ. 'கட்டு' என்பதுவன்றொடர்க் குற்றியலுகரமாயின், அச்சொல்லானது இரண்டரை மாத்திரையே பெறும். அதனால் குரல் எழாமல் இசையில் இடறும். நாம் பாடும்போது முதலடியை

"மட்டுஉ வாங்கங் கபாலங்கை கொண்டிலர்" என்பதுபோல் பாடுவதால் "கட்டு" என்பதிலுள்ள ஈற்று உகரம் முற்றுகர மென்பதற்கு ஐயுறவில்லை.

இவ்வாறே

கத்து காளி கதந்த ணி வித்தவர்
மத்தர் தாங்கட லூரின்ம யானத்தார்
ஒத்தொவ் வாதன செய்துழல் வாரொரு
பித்தர் காணும் பெருமா னடிகளே

திருக்கடவூர் மயானம் - திருக்குறுந்தொகை 5.

என்னும் திருப்பாசுரத்தில் "கத்து' என்பதும் நான்கு மாத்திரைச் சீராதலால், குற்றிய லுகரமாகாது. இதுநிறைந்த உகர உச்சரிப்புப்பெற்றபின்னரே காளி யென்னும் மொழி இசையிலெழுவதால் முற்றிய லுகரமே. இவ்வாறு சுந்தரர் தேவாரத்திலும் "காது" என்னும் மொழி சாதாரணமாய் நெடிற்றொடர் குற்றுகரமாய் ஒலிப்பதின்றி, சந்தத்தின் தன்மையால் முற்றுகரமாவது காண்க:—

காது பொத்தரைக் கின்னர ருழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயம்
கோதின் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல வால்நிழல் கீழறம் பகர
ஏதஞ் செய்தவ ரெய்திய வின்ப [தேன்
மியானுங் கேட்டுநின் றிணையடி யடைந்
நீதி வேதியர் நிறைபுக ழுலகில்
நிலவு தென்றிரு நின்றியூ ரானே.

திருநின்றியூர் - பண்-தக்கேசி 6.

இதன்பின்வரும் வன்றொண்டர் பாடியசெய்யுளில் "கோடு" என்னும் நெடிற்றொடர்க் குற்றியலுகரம்: அதன் தன்மை மாறாது பயன்படுத்துங்காலை, ஏனைய அடிகளின் முதற் சீர் குற்றியலுகரமாயும் ஐகாரக் குறுக்கமாயும் உள்ள இறுதி பெற்ற சொற்களாகி அமைந்திருப்பது காண்க:—

கோடு நான்குடைக் குஞ்சரங் குலுங்க
நலங்கொள் பாதநின் றேத்திய பொழுதே
பீடு விண்மிசைப் பெருமையும் பெற்ற
பெற்றி கேட்டுநின் பொற்கழ லடைந்தேன்

* இதற்கு விதி

(i) 'குற்றுயிர் தனக்குமிரு மாத்திரை குறித்தார்
ஒற்றதை யடுத்துறையி னென் றுதனி நிற்பின்
மற்றவுயிர் மாத்திரை யிரண்டென வகுத்தார்
ஒற்றதை யடுப்பினு முணர்ந்தறிய வல்லார்.

(ii) நீண்டவுயி ரொற்றுடைய நீண்டில திரண்டும்
நீண்ட வுயிரே, தனி நிகழ்ந்த குறிலொன்றே
மாண்ட வபிதானமவை வைத்தது பொருந்த
வாண்டுவரு மீண்டுதனி யல்குமிடை மாதே.

விருத்தப்பாவியல்.

* தாயுமானவர் "அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் ஆநந்த பூர்த்தியாகி" என்னும் செய்யுளில் 'கி' என்பது 'கி' என்று ஒலிக்காது, "கீஇஇ" என இசையில் ஒடுவது காண்க.

பேடை மஞ்ஞையும் பிணைகளின் கன்றும்
பிள்ளைக் கிள்ளையு மெனப்பிறை நுதலார்
நீடு மாடங்கள் மாளிகை தோறும்
நிலவு தென்றிரு நின்றியூ ரானே.

திருநின்றியூர் - பண் - தக்கேசி 7

இங்கு "பேடை" என்பது ஐகாரக்குறுக்கம் பெற்றது. இதற்குத் தொல்காப்பிய விதி:—

ஓரள பாகு மிடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான

(மொழி மரபு 57)

இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் உரை பின்வருமாறு காணலாம்.

"ஒரு சொல்லிடத்தே நின்ற ஐகார ஔகாரங்கள் ஆராயுமிடத்து ஒரு மாத்திரையாய் நிற்கும் இடமும் உண்டு † என்றவாறு.

உம்மையான் இரண்டு மாத்திரை பெறுதலே வலியுடைத்தாயிற்று. இடனுமென்றது ஒரு சொல்லின் முதலிடை கடையென்னும் மூன்றிடத்துங் குறுகும்; அது செய்யுட்கண் ஓசையிடர்ப்பட்டொலிக்குமிடத்துக் குறுகு மென்றற்கு உதாரணமாம். இவைகளை ஓசையால் அறிவதே எளிய வழி. குற்றியலுகரம் மற்றைய சார் பெழுத்துக்களைப்போல்

சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்து வெளிப்படுத்த வேனை மூன்றும்
தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்

(தொல் - பிறப்பியல் 101).

† உதாரணம்-கைப்பை, குவளை. மேற்கூறிய பேடையும் அவ்வாறேயாம். அதன் ஐ குறுகாவிடின் ஓசையிடர்ப்பட்டொலிக்குமென்பதை இசையிலறியலாம்.

என்பர் ஆசிரியர். முற்றுகரமாயின் தனக்கியல்பு இஃதென வெளியிடக்கூடியதாய் மெய்யின்மேல் ஊர்ந்து வரினும் அதைச் சார்ந்ததாய் இயலாது. உசு, முசு என்னும் இருமொழிகளின் ஈற்று உகரம் முற்றியலுகரம் எனக் காட்டுவான், "உச்சகார மிருமொழிக் குரித்தே" (மொழிமரபு. 75) என்பார். மற்றும் முற்றியலுகரம் சந்தியில் தனியே கெடும்†. அதாவது, தான், ஏறியமெய்யைவிட்டு, உகரம் கெடுவது முற்றியலுகரப் பண்பாகும். இதற்கு

"சுட்டு முதலுகர மன்னொடு சிவணி
யொட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே"

(தொல் . உருபியல் 176).

என்பர் தொல்காப்பியனார். இத்தகைய பரிட்சைகளால் குற்றியலுகரமா, அல்லது முற்றியலுகரமாவென நிச்சயித்தபின்னரே, அச்சொல்லின் பொருள் இதுவெனத் துணிதல் நன்று:—

"எழுத்தோ ரன்ன பொருடெரி புணர்ச்சி
யிசையிற் றிரிதல் னிலைஇய பண்பே" *

அவைதாம்

"முன்னப் பொருள புணர்ச்சி வாயி
னின்ன வென்னு மெழுத்துகட னிலவே" *

தொல் - புணரியல் 141

என்பர் தொல்காப்பியனார்.

† "எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
யக்கி னிறுதி மெய்ம்மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகர முற்றத் தோன்றாது"

தொல் - புணரியல், 129

* இச்சூத்திரங்களின் நச்சினார்க்கினியர் விருத்தியுரையை நோக்குக.

தமிழ்ப் பாடம் 65.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[273-வது பக்கத் தொடர்ச்சி]

தன்னைப் பார்க்கவேண்டுமென்ற வோர் ஆசையால் வந்திருப்பதாகச் சொன்ன இருதுபன்னனுக்கு வீமன், தங்கும் மனை முதலியன அமைத்துத்தந்து போயபின், தமயந்தி பாகனைப் போந்துள வாகுகன் தான் தன்னுயிர் நாயகனேவென்று சோதித்த செய்தியை இனிவரும் சில செய்யுள்கள் செப்புகின்றன.

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து. 54.

கருத்து:—குதிரைகளைத் தேரினின்று அவிழ்த்து இளைப்பாற்றியபின் நளன் மடைத்தொழிலும் செய்ய வேண்டியவனுகையால் சமையலறைக்குட் சென்றான்.

ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாம லெல்லா நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை. 55.

பதப்பிரிவு:—ஆதி மறை நூல் அனைத்தும் தெரிந்து உணர்ந்த நீதி நெறியாளர் நெஞ்சம்போல் யாதும் நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்று ஏ பொன் தேர் வரம் பாகன் புக்க மனை.

அன்வயம்:—பொன்தேர் வரப்பாகன் புக்கமனை, ஆதி மறைநூல் அனைத்தும் தெரிந்து உணர்ந்த நீதி நெறியாளர் நெஞ்சம்போல், யாதும் நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்று.

பதவுரை.

பொன் - பொன்னாலாகிய
தேர் - தேரைச் செலுத்துகின்ற
வரம்-சிறந்த
பாகன் - சாரதியாகிய நளன்
புக்க - சேர்ந்த
மனை - சமையல் அறையானது,
ஆதி - யாவற்றிற்கும் முதலாகிய
மறைநூல் - வேதசாஸ்திரங்கள் எல்லாம்
தெரிந்து - கற்று
உணர்ந்த - (அவைகளின் உண்மைப்பொருளையும்) உணர்ந்த

நீதி - நீதியாகிய
நெறியாளர் - மார்க்கத்தை யுடையவர்களது
நெஞ்சம்போல் - மனத்தைப்போல்
யாதும்-(சமையனுக்கு வேண்டியவை) ஒன்றும்
நிரப்பாமல் - சேகரிக்காமலே
எல்லாம் - எல்லாவித உண்டிகளாலும்
நிரம்பிற்று - நிரம்பியதாயிற்று.

விரிவுரை:-நளன், முன் அக்கினிபகவான் கொடுத்த வரத்தினுல் சமைப்பவன் ஆதலால்சமையல்கருவிகள் ஒன்றும் அவனுக்கு வேண்டியதில்லை. வரப்பாகன் என்பதற்குச் சிறந்த பாகன்,என்று பொருள்சொல்வதுடன், வரத்தினுல் சமைக்கின்றவன் என்றும் சொல்லலாம். இவன், சமையனுக்குரிய கருவிகளும் பண்டங்களும் தேடாமல்,சமைப்பதாகியமுயற்சியும் செய்யாமல் இருக்க, அம் மடைப்பள்ளி எல்லாம் நிறையப்பெற்றதற்கு உபமானமாய்ப் புகழேந்தி, "ஆதிமறை நூல் அனைத்துந் தெரிந்து உணர்ந்த நீதி நெறியாளர்" நெஞ்சத்தை எடுத்திங்குக் காட்டுகின்ருர். வேதங்களை உருச்செய்து வாயால் மாத்திரம் சொல்லித்திரிவதால் பயனில்லை என்பதைத் தெரிவிக்கும்பொருட்டுத் "**தேரிந்து உணர்ந்த**" நீதி நெறியாளர், என்று கூறப்பட்டிருக்கின்றது.

மறைநூல் அனைத்தும் தெரிந்து, இப்பிரபஞ்சமெல்லாம் பிரம்ம மயமானது என்பதைஉணர்ந்தவர் நெஞ்சத்தில் தனக்கென்று ஒன்று இல்லையென்னும் குறை எந்நாளும் நேராது. தன்னுடைய தனி உடைமையாய் இது இருக்கவேண்டும், அதுவும் இருக்கவேண்டும்,என்றென்றுஅவாவித் தேடித்திரிகின்றவன் எவ்வளவுதான் பெற்ருலும் அவன் மனம் பின்னும் குறையுடன் கூடியே இருக்கும். வேதநூல்களைக் கற்றுணர்ந்தவர்கள் தான் என்றும் தனதென்றும் உலகத்தினின்றும்பிரித்துக் கொள்ளமாட்டார்களாதலால் பிரபஞ்சமடங்கலும் அவர் உள்ளத்தே அடங்கியிருக்கக் குறைவற்ற மனத்தை உடையவர்களாவார். இந்த விஷயம் எல்லாரும் எங்கும் அறிந்ததொன்றன்று. சிற்சிலரே அறிவார். இருப்பினும் புகழேந்தி, 'நளன் புகுந்த அறை முற்றிலும் நிறைந்துவிட்டது' என்று சொன்னமாத்திரத்தில் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடியதற்கு அதை உவமையாய் அமைத்தார். இப்பாசுரத்தில் தெரிந்துகொள்ள வேண்டியதில் முக்கியமானது, வரப்பாகன் புக்கமனை எல்லாம் நிரம்பிற்று, என்பது அன்று; மறையுணர்ந்த நெறியாளர் நெஞ்சம் நிறைந்திருக்கும் என்னும் வாய்மை. இப்படித் தெரியாதவொன்றைத் தெரிந்ததற்கு உவமைகொள்கின்ற வழக்கம் கம்பருக்கு அதிகம் உண்டு.

இடைச்சுரத்திற் றன்னை யிடையிருளி னீத்த
கொடைத்தொழிலா னென்றயிர்த்த கோமான்—
[மடைத்தொழில்கள்
செய்கின்ற தெல்லாந் தெரிந்துணர்ந்து வாவென்
னைகின்ற நெஞ்சா ணயந்து. [ருள் 56.

கருத்து:—தன்னைக் கானகத்தில் நள்ளிரவில் கைவிட்டுச்சென்ற நாயகன்தான் இப்பாகன் என்று சந்தேகித்த தமயந்தி தன்தோழி ஒருத்தியை அழைத்து "நீ போய் அவன் சமையல் செய்கின்ற விதத்தையெல்லாம் தெரிந்து வா" என்று அனுப்பினுள்.

கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி யரச னருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயனு டென்ருள்
வளையாடுங் கையாள் மதித்து. 57.

கருத்து:—"என் மகனையும் மகளையும் அழைத்துக் கொண்டுபோய் அந்தப் பாகன் அருகில் விளையாட விட்டு அதன்மேல் அவன் என்ன செய்கிருன் என்பதைத் தெரிந்துகொண்டு வா" என்று தமயந்தி இன்னொருத்தியையும் அனுப்பினுள்!

இலக்கணம்

ஒலியினுல் எழுத்துக்களும், எழுத்துக்களால் சொற்களும், சொற்களால் வாக்கியமும் ஆகின்றன. இவ்வாறு ஆகின்ற வாக்கியங்களில் சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து நடக்கின்ற விதங்களைப்பற்றிச் சொல்கின்ற இலக்கணத்தைத் **தோடர் இலக்கணம்** என்பர்.

வாக்கியத்தில் வார்த்தைகள் ஒன்ருேடொன்று தொடர்கின்றபோது அவைகளினுடைய அர்த்தத்தைக் கவனித்தால், ஒவ்வொரு வார்த்தைக்கும் அவ்வார்த்தையை அடுத்துவருகின்ற மறுவார்த்தைக்கும் எந்த விதத்தில் சம்பந்தம் ஏற்படுகின்றதென்பது தெரியவரும். "மரத்தால் செய்த பெட்டியை வாங்கினேன்,' என்பதுஒருவாக்கியம்.இப்படிச்சொல்லாமல் "மரப்பெட்டி வாங்கினேன்" என்ருலும் சிறிதுகூடப் பொருள் வேறுபடவில்லை. முன் வாக்கியதில் 'மரத்தால்' என்ற பதத்திற்கும் அதற்கு அடுத்த 'செய்த' என்ற பதத்திற்கும் இடையே ஒன்றும் மறைந்திராமலே அவ்விரண்டு சொற்களுக்கும் பொருள் சம்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறே 'செய்த' என்னும் சொல்லிற்கும் அதற்கடுத்து வருகின்ற "பெட்டியை" என்னும்சொல்லிற்கும் இடையேயும் ஒன்றும் மறைந்திருக்கவில்லை. அப்படியே 'பெட்டியை' என்னும் சொல்லிற்கும் 'வாங்கினேன்' என்னும் சொல்லிற்கும் இடையிலும் யாதொன்றும் மறைந்திருக்கவில்லை.

மற்ற வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். '**மரம்**' என்பது முதல் பதம். அதற்கடுத்த பதம் 'பெட்டி'. மரம் பெட்டி, என்ற இந்த இரண்டு சொற்களும் தொடர்ந்து நிற்கின்ற இவ்விடத்தில் அவைகளுக்கு இடையே ஆல் என்ற மூன்ரும் வேற்றுமை உருபும், செய்த என்ற பயனும் மறைந்திருக்கின்றன. அவ்விதமே 'பெட்டி வாங்கினேன்' என்னும்போது 'பெட்டியை' என்பதற்குப் பதிலாய்த்தான் 'பெட்டி' என்றுமட்டும் சொல்லுகின்ருேமாதலால் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபுமட்டும் அவ்விரண்டு பதங்களுக்கு மிடையே மறைந்திருக்கின்றது.

இலக்கண நூல்களில் தொடரிலக்கணம் உரைக்கும்போது வாக்கியத்தின்கண் இருக்கின்ற சொற்களில் முன் நிற்பதை நிலைமொழி என்றும், அதை அடுத்துப் பின் வருவதை வருமொழி என்றும் அழைப்பர். மறைதல் என்பதற்குப் பதிலாய் அதே அர்த்தமுடைய **தோகுத்தல்** என்னும் பதம் உபயோகிக்கப்படும். வாக்கியத்தில் ஒவ்வொரு வார்த்தையும் அதற்கடுத்த வார்த்தையோடு சேர்ந்து ஒரு தொடராகும். இப்படி அடுத்து வருகின்ற நிலைமொழி வருமொழி என்னும் இரண்டு வார்த்தைகளுக்கிடையே ஏதேனும் மறைந்திருக்குமாஞல் அந்த இரண்டு வார்த்தைகள் சேர்ந்த அத் தொடரை **தோகைநிலைத்தோடர்**, என்றும், ஒன்றும் மறையாதிருக்குமாயின் **தோகாநிலைத் தோடர்** என்றும் கூறுவர். வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், அதற்கு முன் இருக்கும் வார்த்தையைக் கருதும்போது வருமொழியாயும், அதற்குப் பின் வருகின்ற வார்த்தையைக் கருதும்போது அதுவே நிலைமொழியாயும் அமையும்.

"குதிரையைப் பிடித்து மரத்தில் கட்டினுன்." என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இதனில் மூன்று தொடர்கள் இருக்கின்றன:—

முதலாவது, 'குதிரையை' என்னும் நிலைமொழியும் 'பிடித்து' என்னும் வருமொழியுஞ் சேர்ந்து ஒரு தொடர். இவைகளுக்கு இடையே ஒன்றும் தொக்கு இல்லையகையால் இது தொகாநிலைத்தொடர்.

இரண்டாவது, முன் வருமொழியாயிருந்த 'பிடித்து' என்னும் பதம், இப்பொழுது நிலைமொழியாகி, 'மரத்தில்' என்ற வருமொழியோடு சேர்ந்து, ஒரு தொடராகின்றது. இந்தத் தொடரும் தொகாநிலைத்தொடர்.

மூன்ருவது, முன் வருமொழியாயிருந்த 'மரத்தில்' என்னும் சொல் நிலைமொழியாகிக் "காட்டினுன்" என்னும் வருமொழியோடு மற்ருெரு தொடராகின்றது. இதுவும் தொகாநிலைத்தொடர்.

இன்னொரு வாக்கியம் எடுத்துக் கொள்வோம்:—

ஆமை முதுகில் அலவன் துயிலும் வளநாடு கைவிட்ட மன்னன் வந்து சேர்ந்தான்.

இந்த வாக்கியத்தில் ஒன்பது தொடர்கள் இருக்கின்றன:—

(1) ஆமை முதுகில்—இது விரிந்திருந்தால் ஆமையினுடைய முதுகில், என்றிருக்கும். ஆமை, நிலைமொழி; முதுகில், வருமொழி. இவ்விரண்டிற்கும் நடுவில் 'உடைய' என்னும் ஆரும் வேற்றுமை உருபு தொக்கு இருக்கின்றது. ஆகையால், தொகைநிலைத் தொடர்.

(2) முதுகில் அலவன்—இதனில், 'இல்' என்னும் ஏழாம் வேற்றுமை உருபு விரிந்திருக்கிறது. ஆகையால், தொகாநிலைத்தொடர்.

(3) அலவன் துயிலும்—நிலைமொழி வருமொழிகளுக்கு இடையே ஒன்றும் மறைந்திருக்கவில்லை. ஆகையால் தொகாநிலைத்தொடர்.

(4) துயிலும் வள(மை)—தொகாநிலைத் தொடர்.

(5) வள(மை) நாடு—வளமை ஆகிய நாடு, என்றிருக்கவேண்டிய இத்தொடரில் 'ஆகிய' என்பது மறைந்திருப்பதால் தொகைநிலைத்தொடர்.

(6) நாடு கைவிட்ட—நாட்டைக் கைவிட்ட,என்று விரியும். இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' தொக்கு இருக்கின்றது. ஆகையால் தொகைநிலைத் தொடர்.

(7) கைவிட்ட மன்னன்—ஒன்றும் மறைந்திருக்கவில்லை; தொகாநிலைத்தொடர்.

(8) மன்னன் வந்து—தொகாநிலைத்தொடர்.

(9) வந்துசேர்ந்தான்—தொகாநிலைத் தொடர்.

தொகா நிலைத்தொடர்களில் ஒன்பது விதங்கள் இருக்கின்றன:—(1) வினைமுற்றுத்தொடர் (2) பெயரெச்சத்தொடர். (3) வினையெச்சத்தொடர் (4) எழுவாய்த்தொடர். (5) விளித்தொடர். (6) வேற்றுமைத்தொடர். (7) இடைத்தொடர். (8) உரித்தொடர். (9) அடுக்குத்தொடர்.

மேற்சொன்ன ஒன்பது வகைத் தொகாநிலைத் தொடர்களையும் இன்ன இன்னது இன்னதொடர் என்று தெரிந்துகொள்வது வெகு சுலபம். இந்தத் தொடர்களுக்கு அவ்வப்பெயர் அதனதன் நிலைமொழியைக் கருதி வைக்கப்பட்டிருக்கின்றது! நிலைமொழி வினைமுற்ருயிருந்தால் அந்தத் தொடர் வினைமுற்றுத் தொடர். 'வந்தான் இராமன்' என்ற சொற்ருெடரில் நிலைமொழியாகிய 'வந்தான்' என்பது வினைமுற்ருதலால் இந்தத் தொடரை வினைமுற்றுத்தொடர் என்றழைப்பார். இதனையே "இராமன் வந்தான்" என்று மாற்றிச் சொன்னுல், "இராமன்" என்ற நிலைமொழி எழுவாய் அல்லது முதல் வேற்றுமையா யிருப்பதால் அது எழுவாய்த்தொடர் ஆகிவிடுகின்றது.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[275-வது பக்கத் தொடர்ச்சி]

ஏரியல்:—தலைவ, பொறுத்தருள்க. நின் ஏவலுக்கேற்றவா றிணங்கி, என் ஆவித்தொழிலை அமைதியுடன் செய்வேன் (1).

ப்ராஸ்ப்பீரோ:-செய்; இரண்டு தினங்கள் பொறுத்து உன்னை நான் விட்டுவிடுவேன்.

ஏரியல்:—அதுவன்ருே என் பெருந்தகைத் தலைவன் (2). யாது யான் செய்தல் வேண்டும்? சொல்க, யாது? யாது யான் செய்தல் வேண்டும்?

ப்ராஸ்ப்பீரோ:-போய் நீ உன்னையோர் நீரமகள்போல் செய்துகொள். ஏனைய கண்மணிகளுக்கெல்லாம் காணப்படுவதின்றியே, உன் பார்வைக்கும் என் பார்வைக்கும் அன்றித் தென்படுதற் கமையாதே (3). போ, இவ்வுருவத்தை ஏற்றுக்கொண்டு அதனில் இங்கு வா; போ, ஊக்கமுடன் விரைக.

[ஏரியல் போகின்ருன்]

(1) ப்ராஸ்ப்பீரோ அச்சுறுத்தியதற்கு அடங்கிய எரியல் இவ்வாறு பணிவுடன் மொழிகின்ருன்.

ஆவித்தொழில்—ஆவி உருவமாக இருக்கின்ற எரியல் செய்யவேண்டிய எவல்கள்.

(2) இரண்டு தினங்களில் ப்ராஸ்ப்பீரோ தனக்கு விடுதலை தந்துவிடுவான் என்பது கேட்டு மகிழ்ந்து, "பெருந்தகைமையுடைய நீ இவ்வாறு உன் குணத்திற்கு உரியதையே செய்கின்ருய்" என்று எரியல் வியந்து வந்தனை புரிகின்ருன்.

(8) இவ்வாக்கியம், ஏனைய வாக்கியங்களைப் போன்றே, ஆங்கில அமைப்பினின்று மாருமல் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்றது. "ஓர் நீரமகளாக உன் உருவத்தை மாற்றிக்கொண்டு, உனக்கும் எனக்கும் தவிர வேறு ஒருவருக்கும் தென்படாமல் வா"—என்பது பொருள்.

எழுந்திரு, அன்புடை என் இதயமே, எழுந்திரு! நன்கு துயின்றனை நீ.

மிராண்டா:—(துயில் நீங்குபவளாய்). நின் கதையின் புதுமை என்னில் ஓர் பாரத்தை வைத்தது (4).

ப்ராஸ்ப்பீரோ:—அதனை உதறிவிடு (5). வா. வினயமுடன் நமக் கொருபோதும் உத்தரம் வழங்காத எனது அடிமை காலிபனைச் சென்று காண்போம்.

மிராண்டா:-நோக்குதற்கு யான் நயவாதவோர் தூர்த்தன் ஐய, அது.

ப்ராஸ்ப்பீரோ:—ஆயினும், தற்காலம், அவன் நமக்கு இன்றியமையாதவன். நமக்குக் கனலாக்கித்தருகின்றான், விறகு கொணர்கின்றான், இன்னும் நமக்கு உதவவல்ல காரியங்கள் செய்கின்றான் (6). ஏனடா ஏ! அடிமை! காலிபன்! ஏ மண்ணே, ஏ! சொல்லடா (7).

காலிபன்:—(உள்ளிருந்தே). வேண்டிய விறகு இருக்கின்றது உள்ளே (8).

ப்ராஸ்ப்பீரோ:-வாவடா வெளியே, சொல்கின்றேன். வேறு வேலை இருக்கின்றதுனக்கு. வாவா, ஏ ஆமையே! (9). வந்தாயா.

[நீரரமகள்போல் ஏரியல் வருகின்றான்]

அழகிய தோற்றமே! என் விசித்திர ஏரியல், நின் காதுடன் இதனைக் கேள் (10).

ஏரியல்:—தலைவ, அவ்வாறே செய்கின்றேன்.

[ஏரியல் போகின்றான்]

ப்ராஸ்ப்பீரோ:—நின் துஷ்டத்தாயின்மீது பேய்தானே கூடிப் பெற்ற ஏ, விடமுடை அடிமையே, வா வெளியே (11).

[காலிபன் வருகின்றான்]

காலிபன்:—தீமைமிகு சகதியிலிருந்து அண்டங்காக்கை இறகினால் என்னுடைய தாயானவள் திரட்டியெடுத்த கொடுமைவாய்ந்த பனியேபோன்ற பனி உங்கள் இருவர்மீதும் பொழியட்டும் (12). மேல் காற்று உங்கள்மீது அடித்து உடல் முழுவதும் கொப்புளங்கொள்ளச் செய்யட்டும்.

ப்ராஸ்ப்பீரோ:—இதற்காக (13). திமிர்வாயு, நின் மூச்சினை அடைக்கும்; பக்கச் சூலைகள், இன்றிரவு கொள்வாய் நீ, நிச்சயம். இரவின் பரப்பில், எல்லாப் பயிற்சிகளையும் உன்மீது செய்யுமாறு முள்ளம்பன்றிகள் வெளித்தோன்றும் (14). தேன் கூண்டு போன்று அடர்த்தியாய் நீ துளைக்கப்படுவாய். ஒவ்வொரு குத்தும், அதனைச் செய்த தேனீயின் கொட்டினைவிடக் கடுக்கும்படி செய்வேன் (15).

காலிபன்:—நான் என் உணவினைக் கொள்ளவேண்டும் (16). என்னிடத்திலிருந்து நீ கவர்ந்துகொண்ட இந்தத் தீவானது, என் தாயானவள் ஸைக்கொராக்ஸினால், என்னுடையது (17). முதலில் நீ இங்கு வந்தபோது என்னைத் தட்டிக்கொடுத்தாய், பெரிதும் பாராட்டினாய், பழம் பிழிந்த பானகங்கள் கொடுப்பாய், பகலினும் இரவினும் எரிகின்ற பெரிய வொளிக்கும் சிறியதற்கும் எப்படிப் பெயரிடுவதென்று எனக்குக் கற்பித்தாய் (18). அப்பொழுது நான் உன்பால் அன்புவைத்திருந்தேன்; இந்தத் தீவின் தன்மைகளையெல்லாம் நானுனக்குக் காட்டினேன்—தெண்ணீரூற்றுக்கள், உவர்நீர்க் குழிகள், மலட்டு இடங்கள், செழிப்புடை நிலங்கள்! அவ்வாறு செய்த யான் கெட்டழிக (19).—தேரைகள் வண்டுகள் துரிஞ்சில்கள், ஸைக்கொராக்ஸின் மந்திரமெல்லாம் உன்னைப்பற்றிக் கொள்ளட்டும் (20)! முன்னே எனக்கே மன்னனாக விருந்த நானே உனக்கு இப்பொழுதிருக்கும் குடிகளெல்லாம் (21). இத்தீவின் மற்ற விடங்களை எல்லாம் கைப்பற்றி, என்னை இவ்வலிய கற்பாறையில் பன்றியென அடைத்துவைத்திருக்கின்றாய் (22).

நீரரமகள்—கடல் ஆறு முதலிய இடங்களில் வாழும் தேவதை.

(4) கதையின் புதுமையிலும் ப்ராஸ்ப்பீரோவின் மந்திரத்தால்தான் தூக்கங்கொண்டாள் என்பதை மிராண்டா அறியாள்.

பாரத்தை வைத்தலாவது—கண் இமைகள் பாரந்தாங்கமாட்டாமல் மூடுவதுபோல் மயக்கங்கொள்ளுதல்.

(5) தூக்கக் கலக்கமாகிய அப்பாரத்தை அகற்றிவிடு—என்பது பொருள்.

(6) விறகுவெட்டிக் கொணர்ந்து தீமூட்டிக் கொடுத்து, இன்னும் இதுபோலச் சில வேலைகள் நமக்கு அவன் செய்வதால், துஷ்டனாயினும் அவனை நாம் அகற்றிவிடாமல் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது—என்பது பொருள்.

(7) குகையிற்குள் இருக்கும் காலிபனைப் ப்ராஸ்ப்பீரோ கூப்பிடுகின்றான். சொல்லடா—எங்கிருக்கின்றாய் சொல்,—என்பது பொருள்.

(8) விறகு வெட்டிக்கொண்டு வருதற்குத் தன்னை அனுப்புவதற்கு ப்ராஸ்ப்பீரோ கூப்பிடுவதாக நினைத்த காலிபன், இருக்கின்ற விறகு போதுமெனக்கூறி வெளிவர மறுக்கின்றான்.

(9) ஆமை - ஆமையைப்போல் மந்த நடையுடையவனே—என்பது பொருள்.

(10) ஏரியல் காதில் ஏதோ இரகசியமாகக் கூறி அனுப்புகின்றான்.

(11) உன் தாய், பேயோடு கூடிப் பெற்றுக்கொண்ட பிள்ளையே நீ—என்று ப்ராஸ்ப்பீரோ காலிபனை வைகின்றான்.

(12) சூனியம் வைப்பவர்கள், அதற்காக, சதுப்பு நிலங்களிலிருந்து அண்டங்காக்கை இறகினால் பனிநீர் திரட்டிக் கொணர்ந்து அதனை, தாம் கெடுக்க நினைப்பவர் மீது தெளிப்பார்களாம்—அத்தகைய பனி இப்பொழுது உங்கள்மீது பொழிந்து நீங்கள் நாசமடையக் கடவீர்—என்று காலிபன் வைகின்றான்.

(13) இதற்காக - இவ்வாறு எங்களை நீ வைவதற்குத் தண்டனையாக.

(14) முள்ளம் பன்றிகளை ஏவி உன்மீது இரவு முழுவதும் புரளச் செய்கின்றேன் பார்—என்பது பொருள்.

(15) வினயமுடன் ஒருபோதும் உத்தரம் வழங்காத காலிபனை ப்ராஸ்ப்பீரோ தண்டிக்கும் விதங்கள் இவை. திமிர்வாயு நோயாலும் பக்கச்சூலை மூச்சடைப்பாலும், முள்ளம்பன்றிகளின் குத்தலாலும், நானுன்னை இவ்விரவெல்லாம் வருந்தும்படி செய்வேன் என்பதை நீ நிச்சயமாக நினைத்துக்கொள்—என்பது பொருள்.

(16) இது என் சாப்பாட்டுவேளை, நான் போகின்றேன்—என்பது கருத்து.

(17) என்னுடைய தாயாகிய ஸைக்கொராக்ஸிற்கு உரிமையாயிருந்த இந்தத் தீவானது அவளுக்குப்பின் எனக்கே உரிமையாக வேண்டும், அதனை நீ என்னிடமிருந்து கவர்ந்துகொண்டாய்.

(18) சூரியன் சந்திரன் முதலியவைகளின் பெயரை ப்ராஸ்ப்பீரோ காலிபனுக்குக் கற்பித்தான்.

(19) உன்னிடம் அன்புகொண்டு இத்தீவின் தன்மைகளை எல்லாம் யான் காட்டிவிட்டபடியால் நான் நாசமடைய வேண்டியது தக்கதே—என்பது பொருள்.

(20) துரிஞ்சில்—வௌவால். மற்றவர்களைப் பற்றிக் கொள்ளும்படி மந்திரித்து ஏவப்படுபவை, தேரை, வௌவால், வண்டு முதலியன.

(21) முன்னே, இத்தீவு எனக்கே உரியதாக இருந்தது. எனக்கு நானே அரசனாக இருந்தேன். இப்பொழுது இந்தத் தீவிற்கு நீ அரசனாகிவிட்டாய். உனக்கிருக்கும் குடிமக்கள் யாவரோ எனில், நான் ஒருவனே—என்பது பொருள்.

(22) தீவு முழுவதும் கவர்ந்துகொண்ட என்னை இக் கற்பாறையிலா அடைத்து வைப்பது - என்று ஏசுகின்றான்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

4-ம் பத்து 9-ம் தசகம்

[267-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்.

மறுக்கிவல் வலைப்படுத்திக்
  குமைத்திட்டுக் கொன்றுண்ப
ரறப்பொருளை யறிந்தோரா
  ரிவையென்ன யுலகியற்கை
வெறித்துளவ முடியானே
  வினையேனை யுனக்கடிமை
யறக்கொண்டா யினியென்னா
  ரமுதேகூ யருளாயே.

குறிப்பு:—இப்பாசுரத்தில் ஆழ்வார் உலக விபரீதங்களையும் மனிதரது கெட்ட நடத்தையையும் முற்றுமுணர்ந்தவர்போல் அவர்களது பாவச்செயல்களை விவரித்து இன்னுதாராகின்றார்.

உரை:—மறுக்கி - பயம் உண்டாக்கி, வல் - விலக வழியில்லாமல், வலைப்படுத்தி - தங்கள் துர்ப்போதனைக்கு இணங்கும்படி பூர்ணமாய் வசமாக்கிக்கொண்டு, குமைத்திட்டு-அல்லல்படுத்திப் பொருளை அபகரித்துக்கொண்டு, கொன்றுண்பர்-அவர்களது உயிர்களையும் வாங்கித் தங்கள் வயிறு வளர்ப்பர் இவ்வுலகத்தில் உள்ள சிற்சிலர். அறப்பொருளை - தர்மமான மார்க்கத்தை, அறிந்து - சாஸ்திரத்தால் தெரிந்து, ஓரார் - ஞாபகத்தில் வைத்து அதன் வழியே நடவார். ஹே! வெறித்துளவ முடியானே - வாசனையுடைய துளபமாலையை யணியும் மஹானே, உனக்கடிமை அறக்கொண்டாய் - உன் திறத்திலே நான் பூர்ணமாய்த் தாவிய கைங்கரியத்தில் ஸ்திரப்பிரஞ்ஞனாய் நின்று வேறு விஷய ருசியில்லாமல் உனக்கு அடிமையாகும்படிகொண்டாய், ஆர் அமுதே-எத்தனை அநுபவித்தாலும் திருப்தியடையக்கூடாத அமிர்தமே, இனி - இனி மேலும், கூவியருளாயே - இதற்கு மேலும் உனக்கு ஆளாக கூவிக்கொள்ளாயோ!

7-ம் பாசுரம்.

ஆயேயிவ் வுலகத்து நிற்பனவும் திரிவனவும்
நீயேமற் றொருபொருளு மின்றிநீ நின்றமையா
லேயேமூப் பிறப்பிறப்புப் பிணியேயென் றிவை
  [யொழியக்
கூயேகொள் ளடியேனைக் கொடுவுலகங் காட்டேலே.

விசேஷ அவதாரிகை:—இந்த உலகத்தில் உள்ள ஸ்தாவர ஜங்கம வஸ்துக்கள் எல்லாவற்றிலும் பகவான் அந்தர்யாமியாய் வியாபித்து நடத்துகிறானென்ற தத்துவ உணர்ச்சியுள்ள விவேகிகள், உள்ளபடியே பகவானுக்கு எல்லாம் சொந்தமென்றும், அவன் சுகமே அவ்வஸ்துக்களுக்குப் பொருளும் பயனுமென்றும் தேர்ந்து அவன் திறத்திலே எல்லா விஷயத்திலும் ஈடுபட்டுச் சந்தோஷிக்கக் கடவராயிருக்கிறார்கள். இங்ஙனம் தத்துவ உணர்ச்சியுள்ளவர்கள் இவ்வுலகத்தில் இல்லை. ஆனால் இப்போது உலக நடவடிக்கைதான் என்னவாய் இருப்பதென்று ஆராய்ந்தால், ஜனங்கள் பிறப்புத் துன்பத்தையும் இறப்புத் துன்பத்தையும் வியாதியையும் அநுபவித்துத் தவிக்கிறார்களே தவிர வேறொன்றும் தென்படவில்லை. இப் பொல்லா வர்த்தமான உலகத்தை நான் காணமாட்டுவே னல்லேன். இனிஇவ்வுலகிலிருந்தும் என்னை வாங்கியருளவேண்டும். உலகத்தாரியல்பு இல்லாத என்னைக் கூவியருளவேணும் என்கிறார். உன் கலவையே சுகம் என்றும், உன் பிரிவே துக்கம் என்றும் இருக்கும் எனக்கு இந்தக் கொடுமையான உலக வழக்கத்தைக் காட்டா தருளவேண்டுமென்கிறார். இப்பாசுரத்துக்குப் பொழிப்புரையும் இதுவே யாயிற்று.

189148.

8-ம் பாசுரம்.

காட்டிநீ கரந்துமிழு
  நிலநீர்தீ விசும்புகா
லீட்டிநீ வைத்தமைத்த
  விமையோர்வாழ் தனிமுட்டை
கோட்டையினைக் கழித்தெனையுன்
  கொழுஞ்சோதி யுயரத்துக்
கூட்டரிய திருவடிக
  ளெஞ்ஞான்று கூட்டுதியே.

உரை:—காட்டி - பூர்வ பிரளயம் முடிந்தவுடன் உண்டான சிருஷ்டியில் வெளியில் பிரகாசிப்பித்து, கரந்து-அடுத்த பிரளயத்தில் மறைத்து, நீ உமிழும்-நீ (பகவானை விளித்துக் கூறியபடி) வெளிப்படுத்தும், நிலம் நீர் தீ விசும்பு கால்-பிரதிவி அப்பு தேயு ஆகாசம் வாயு, ஈட்டி நீ வைத்த - இப் பஞ்சபூதங்களாக நீதொகுத்த, இமையோர் வாழ் - கண்கொட்

டாத தேவதைகள் வாழ்கின்ற, தனி - நிகரற்ற, முட்டை - கோழிமுட்டை வடிவம்போன்ற அண்ட பித்தியாகிய, கோட்டையினை-வாயில் எங்கிருப்பது என்று தெரியாத கோட்டையினை, கழித்து-தாண்டி வெகு தூரம்விட்டு, உன்கொழுஞ்சோதி உயரத்து - நெருங்கிய தேஜோமயமான ஆகாசத்திலே, என்னை - அடியேனை, கூட்டரிய-ஸ்வயதந்திரத்தால் எவரும் அடையக்கூடாத, திருவடிகள் - வைகுண்டத்தில் நீயாயிருக்கும் பரமபதத்தில் உன் திருவடிகளில், எஞ்ஞான்று கூட்டுதியே - எந்தக்காலத்தில் கூட்டப் போகிறாயோ? காலஅளவு தெரிந்திருந்தால் ஆற்றிப் பொறுத்திருக்கலாம் என்று திருவுள்ளம்.

குறிப்பு I:—முதலில் இதிலுள்ள வேதாந்த தத்துவம் ஒன்று உணரற்பாலது. வைஷ்ணவர்கள் சாந்தோக்கிய உபநிஷத்து விதிப்பதை ஒத்து "எவனை ஈசன் வரிக்கின்றானோ அவனே மோக்ஷ மடைந்து அவனின் திவ்விய வைகுண்டத்துக்கு ஏகி அவனுக்குப் பணிவிடை செய்வா"னென்று சித்தாந்தம் செய்திருக்கிறார்கள். இதனால் தபஸு வேண்டாமென்று கூறினதாகவாவது ஞானயோகம் பக்தி யோகம் பிரபத்தி யோகம் வேண்டாமென்றாவது நினைத்தல் கூடாது. மோக்ஷமடைய முக்கியக் காரணம் பகவானது திருவருளே. Salvation is only by Divine grace and is not the result of good deeds done or of our strivings and earnest endeavours.

II. ஆழ்வார் இங்கு வர்ணித்திருக்கும் பிரம்மாண்ட அமைப்பு. (Conception of the universe) நவீன வான சாத்திரத்தை ஒத்திருப்பது வியக்கத்தக்கது. பிரம்மாண்டம் ஒரு கோழிமுட்டை வடிவமாய் இருப்பதென்றும், அதற்கு ஊர்த்த முகத்தில் ஓர் இடைவழியொன்று போன்று மிகவும் சிறியதாயிருப்பதாகவும் திருவுள்ளப்படுகிறார். அந்த ஸ்தலம் தான் திருவோண நக்ஷத்திரத்துக்கு மேலே காணப்படுகின்ற சிறு நக்ஷத்திரத் தொகுதிகளான Milky wayக்கு அப்பாலிருப்பதாக மஹா பாரதம் கூறுகின்றது. இதுவும் தாண்டி மேல் அப்பிராக்கிரதமான நம்மனதுக்கு எட்டாத பூத சூக்ஷமங்களாலமைக்கப்பட்ட வைகுண்டம் இருப்பதாகச்சித்தாந்தம். இவ்விடம் ஏகுகிறவர்களே துக்கத்தைக் கடந்த நாடு (வைகுண்டம்) ஏறுகிறார்களென்றுசித்தாந்தம். இந்த வைகுண்டத்துக்கு எப்போது அடியேனைக் கூவிக்கொள்வாயென்று ஆழ்வார் பகவானை வினவுகிறார். இதைப்பற்றி விவரமாய் நவீன வான சாஸ்திர ஆராய்ச்சியுடன் யாம் காலநிலயம் 3-வது வால்யூயம் 66-ம் பக்கத்தில் விசாரித்துளோம். அங்கு வானசாஸ்திர நவீன ஐரோப்பியரின் ஆராய்ச்சியுடன் ஒத்துப்பார்த்து விரிவாய் எழுதியுள்ளோம். அவைகளை அங்குக் கண்டுகொள்ளலாம்.

III. கொழுஞ்சோதி - ஜோதிமயமான மண்டலம் Stellar nebulae that surrounds the universe. இதைப்பற்றியும் கலாநிலயம் 2-வது வால்யூயம் 66-ம் பக்கத்தில் விசாரித்திருக்கிறோம். திருவாய்மொழி மூன்றும் பத்து 10-ம் தசகம் 5-ம் பாட்டின் உரையினும் இதைப்பற்றி விவரமாய் ஆராய்ச்சியுடன் கட்டுரை எழுதியுளோம். அங்குக் கண்டு கொள்க.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :		தைலங்கள் :	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0	சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0	அமிர்தாமலக ”	0-12-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0	பிருங்காமலக ”	0-12-0
குழந்தைகளுக்கு		ஸ்திரீகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0	ஸௌதக டானிக்	2-0-0
பால சஞ்சீவினி	0-4-0	கர்ப்பாசய டானிக்	2-0-0
பால ஸுதா (டானிக்)	1-0-0	ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L.ச்யாவனப்ராசா I.D.L.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L.எ.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச- சிறந்த டானிக் சத்வைத்யசாலா - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்த சிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக் ஸர்வ எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையினும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால், விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

எமது புதிய பிரசுரங்கள்

சோவியத் ருஷியா.

இது பண்டிதர் ஜவஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றந்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரு. 1-4-0. தபால் செலவு வேறு.

இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இராஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனுக்குகின்றது. விலை ரு. 1-4-0. தபால் செலவு வேறு.

சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரு. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

திரு அருட்பா

பி. ஏ., எம். எல்., அட்வொகேட்,
ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு
ஒன்றே
சுவாமிகள் கை எழுத்தைக்கோண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும் !!!

6-வது தனிப் பாசுரப் பகுதி
(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)

ANCIENT JAFFNA

Mudaliar C. Rasanayagam C. C. S.

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

Rs. 5 8 0 **Postage extra.**

KALANILAYAM
Vellala Street, Purasawalkam, Madras.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனூர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகரவெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B. A., B. L.,

விலை அணா **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

வர்த்தமானம்

பிரமசரியத்திற்கு வரி:—ஜகோஸ்லேவியா நாட்டில் ஒவ்வொருவரும் முப்பது வயதிற்குள் கலியாணம் செய்துகொள்ளவேண்டும். அவ்வயதிற்குள் மணந்து கொள்ளாதவரிடமிருந்து அந்நாட்டு அரசாங்கத்தார் பிரமசரிய வரி என்ற வோர் வரி வசூல் செய்கின்றனராம். நாட்டின் மனிதபலம் வலிவடையச் செய்யும்பொருட்டு அரசாங்கத்தார் இம்முறையைக் கையாள்கின்றனர் என்று தெரிகின்றது.

***

ஆரம்பக் கல்வி:—சென்றவாரம், சென்னைக் கல்வி இலாக்கா மந்திரியின் தலைமையின்கீழ், ஆரம்பக் கல்வி என்னும் விஷயமாய், அரசாங்க டிரெயினிங் கல்லூரித் தலைவர் மிஸ்டர் சாம்பியன் என்பவர் ஒரு உபந்யாசம் செய்தார். அப்பொழுது அவர் கூறியதாவது:—

"இந்தியாவில் சரியான முறையில் ஆரம்பக் கல்வி யளிக்கப்படவில்லை. எங்கும் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து நடத்துதல் மாத்திரம் போதாது. ஆரம்பக்கல்வி முடிந்துவருபவன் உலகவறிவுடையவனுகவிருக்கவேண்டும். அதாவது பத்திரிகைகளைப்படித்து அதில் சொல்லப்பெற்றிருக்கும் விஷயங்களை அறிந்து கொள்ளக் கூடியவனுக விருக்கவேண்டும். இப்பொழுது சென்னையை எடுத்துக் கொள்வோம். இங்குள்ள ஆரம்பக்கல்வி உபாத்தியாயர்களில் பெரும்பாலோர்க்குப் பத்திரிகை படித்து அதனில் கூறப்பெற்றுள விஷயத்தை அறிந்துகொள்ளத்தெரியாது. ஆரம்பக்கல்வியை அளிப்பது பத்திரிகையே.

அமெரிக்காவில் ஆரம்பக்கல்வி முறை வெகுதூரம் முன்னேறியுளது. அங்கு ஒருவருடப் பத்திரிகை வெளியீடுகளில் கையாளப்படும் அபூர்வ பதங்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் புத்தகமாக ஆக்கியுள்ளார்கள். ஆரம்பப் பாடசாலையை முடித்து வெளிவருபவருக்கு அப்பதங்களெல்லாம் நன்குதெரியும். எனவே அங்கு ஆரம்பக்கல்வியுடையவனுக்கு உலக விஷயமும் தன்னுட்டு அரசியல் விஷயமும் நன்குதெரியும். அத்தகையதோர் முறை இங்கும் கையாளப் பெறவேண்டும். அதாவது சுதேசபாஷைப் பத்திரிகைகளைப் படிக்கவும், அவைகளிலுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும் ஆரம்பப்பாடசாலைகள் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். கல்வி வல்லார் சிலரைக் கொண்டு பத்திரிகைகளில் உள்ள பதங்களைச் சேகரித்து அப்பதங்களின் பயிற்சி மாணவர்களுக்கு ஏற்படுமாறு செய்தல் வேண்டும். இந்தியாவில் பெரும் அரசியல் மாறுதல்கள் ஏற்படப்போகும்இத்தறுவாயில் மக்கள் ஜனநாயகப் பொறுப்பை ஏற்பதற்குரிய நிலையை எய்தவேண்டாவா. இந்நிலையில் கல்வி இலக்கா இவ்வழியில் முயன்று இந்தியாவையும் மற்ற மேனுடுகளைப்போல் முன்னேறச் செய்ய வேண்டாவா?"

இன்னபடி ஊக்கமொடு உரைத்து வைத்த சாம்பியன் அவர்கள் மேனுடு உற்றுள நன்னிலை யாதெனக் கூறவில்லை. கொலையும், களவும், அமைதியின்மையும், புருஷனுக்கும் மனைவிக்கும் போட்டியும், உற்ருர் பெற்ருரிடம் பகையும், வேலையில்லாமையும் தற்கொலையும் முடிவெனின், அவ்வழி இந்தியாவும் முயல வேண்டுவது அவசியந்தானே என்று எமக்கு விளங்கவில்லை.

***

வான சாஸ்திரம்:—ஏரவாடா சிறையிலிருக்கும் காந்தியடிகள் இப்பொழுது வானசாஸ்திரம் படித்து வருகின்றனராம். அவரது உபயோகத்திற்காக இரண்டு தூரதிருஷ்டிக் கண்ணுடிகள் சிறையில் அமைக்கப்பெற்றுள்ளவாம். ஒரு நண்பரிடத்தில் காந்தியடிகள் வானசாஸ்திரத்தைப்பற்றிக் கூறியதாவது:—

"வான சாஸ்திரம் மிகச் சிறந்த சாஸ்திரம். அதை ஒவ்வொருவனும் படிக்கவேண்டும். நான் இம்முறை சிறைவந்ததிலிருந்து வான நூலைப் படித்து வருகின்றேன். இச்சாத்திரம் என்னைக் கவர்ந்துவிட்டது. கிடைக்கின்றஓய்வை இச்சாஸ்திரத்தைக் கற்பதிலேயே செலவிடுகின்றேன். ஈச்வரனுடைய சர்வக்ஞத்துவத்தையும் சிருஷ்டியின் பெருமையையும் இச்சாத்திரம் நன்குவிளக்குகின்றது. இரவில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கும்பொழுது, திறந்தவெளியில் படுத்துக்கொண்டு தூய்மைநிறைந்த ஆகாசத்தை நோக்கினுல், எத்தகைய சிறு மனமும் குவிந்து சாந்தியடையும். ஈச்வரனுடைய வல்லமையும், விளங்கலாகும். அப்பொழுது, உள்ளும் புறமும் ஒன்ற ஒருவன் ஆனந்த பரவசம் அடையாமல் தீராது. ஈச்வரனும், அவனது சிருஷ்டியும் ஆச்சரியம். ஆச்சரியம்."

***

28 லட்சம்:—அரசியல் அமைப்பாலும் செல்வ வளத்தாலும் சிறந்துள்ள இங்கிலாந்தில், சென்ற மார்ச்சு மாதம் 20ந் தேதியுடன் முடியும் ஒருமாதத்தில், $22\frac{1}{2}$ லட்சம் ஆணும், $4\frac{1}{2}$ லட்சம் பெண்களும் ஒரு லட்சம் சிறுவர்களும் வேலையற்றவர்களாய்க் கஷ்டப்படுகின்றனர் என்று லோகோபகாரிப் பத்திரிகை கூறுகின்றது.

***

விதியின் வலிமை:—அநந்தபுரம் ஜில்லாவில் அரசாங்க உத்தியோகத்திலிருக்கும் ஸ்ரீமான் ரங்கராவ் என்பவர் சோதிடத்தின் மூலமாக, தமது மூத்தமகனுக்கு மார்ச்சு மாதம் 23ந்தேதியொரு கண்ட மிருக்கின்றதென்று உணர்ந்து, அவனை அக்கண்டத்திலிருந்து தப்புவிக்கும்பொருட்டு, அவனை ஓர் அறையில் வைத்துப் பூட்டி, தமது மனைவியினிடம் சாவியைக் கொடுத்து வேலைக்குச் சென்றாராம். அவனது தோழர்கள் அன்று எப்படியோ அறைச் சாவியைக் கைப்பற்றி அவனை வெளியில் விளையாட அழைத்துச் சென்றனராம். அவ்வூரில் உள்ள நதிக்கரையில் அவர்கள் விளையாட அவன் அதனில் விழுந்து இறந்து போனானும்.

***

இராமாயண சித்ரமாலை:-இதனில் பத்துப் படங்கள் ஒவ்வொன்றும் 14 அங்குல நீளம் 9 அங்குல அகலமுள்ள காகிதத்தில் அச்சிடப்பெற்றுப் புத்தகமாய்ப் பயிண்டுசெய்யப்பெற்றுளது. இதன் விலை ரூ 2. வேண்டுபவர் M. S. சர்மா அண்டு சன்ஸ், ஆர்ட் பப்ளிஷர்ஸ், $\frac{2}{96}$ பெரிய தெரு, திருவல்லிக்கேணி சென்னை என்னும்விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். இராமாயணத்தின் கதையை விளக்கும் 10 படங்கள் காணப்படுகின்றன. எமக்கு அனுப்பப்பெற்ற புத்தகத்தில் முதற்படம், வஞ்சனை மானுக்குச் சீதைவிரும்புதல், பின் அவ்வஞ்சமானை இராமன் எய்தல், இலக்குவன் சீதையின் சொற்கஞ்சி இராமனைத் தேடிச் செல்லல், இராவணன் சந்நியாசியாகவருதல், ஜடாயுவதை, சீதை அசோகவனத்தில் சிறையிருத்தல், சேதுபந்தனம், இராமஇராவண யுத்தம், சீதையின் சோதனை ஆகிய இப்படங்கள் அழகாக வரையப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு படத்தையும் விளக்குமாறு ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் K. S. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் ஆங்கிலத்தில் சிறுவாக்கியங்களை மிக அழகாகஎழுதிஅமைத்திருக்கின்றார். இப்படங்களை எல்லோருங்கண்டு அநுபவித்தல் அவசியமாகும்.

KALANILAYAM, Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு	ரூ.	1	0	0
5 டப்பிகள்	ரூ.	4	0	0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச்செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலாநிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security—
for the policyholder from an investment point of view.
for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)